வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 15.06.2021 செவ்வாய்க்கிழமை | இதழ் : 194 | பக்கங்கள் : 16

## கம்மன்பிலவுக்காக பொங்கியெழுந்த ‘மொட்டு’ அரசின் பங்காளி கட்சிகள்

### கூட்டாக கண்டன அறிக்கையும் வெளியீடு

கொழும்பு, ஜூன் 15

வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கு சிறீலங்கா பொதுஜன முன்னணி அரசின் 8 பங்காளிக் கட்சிகள் கண்டனம் வெளியிட்டுள்ளன.

எரிபொருள் விலையை அதிகரிக்கும் தீர்மானத்தின் பொறுப்பை அமைச்சர் மீது சுமத்த எடுக்கும் முயற்சிக்கான கண்டனம் எனும் தலைப்பில் அரசின் பங்காளிக் கட்சிகள் அறிக்கையொன்றையும் நேற்று வெளியிட்டுள்ளன.

எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பாக சிறீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச் செயலாளர் வெளியிட்டிருந்த

15

## மேலும் 124 பேர் மரணம் கொரோனா பலி 2,260

கொழும்பு, ஜூன் 15

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 124 பேர் உயிரிழந்தனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன நேற்று உறுதிப்படுத்தியுள்ளார்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 2,260 ஆக அதிகரித்துள்ளது என அரசு தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

## 2,259 தொற்றாளர்

கொழும்பு, ஜூன் 15

நாட்டில் நேற்றும் 2 ஆயிரத்து 259 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி நாட்டில்

15

## வடக்கில் 27 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், ஜூன் 15

கிளிநொச்சி மாவட்டத்தில் 14 தொற்றாளர்கள் உட்பட நேற்று வடக்கு மாகாணத்தில் 27 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தி

15

# ராஜபக்ஷ குடும்ப ஆட்சி விரைவில் முடிவுக்கு வரும்

### முருத்தெட்டுவே ஆனந்த தேரர் கூறுகின்றார்



கொழும்பு, ஜூன் 15

“ராஜபக்ஷ அரசின் மீதான மக்களின் எதிர்ப்புகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இந்த நிலைமையில் ராஜபக்ஷ குடும்ப ஆட்சி முடிவுக்கு வரும் காலம் வெகுதொலைவில் இல்லை.”

- இவ்வாறு கொழும்பு அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

15

## நிவாரண பணிக்கு உதவுங்கள்

### உள்நாடு, புலம்பெயர் மக்களிடம் விக்னேஸ்வரன் எம்.பி. கோரிக்கை!

யாழ்ப்பாணம், ஜூன் 15

தொடரும் பயண தடை மற்றும் முடக்கம் காரணமாக பசியில் வாடும் ஏழை, எளிய மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக முடிந்தளவு நிதி உதவியைச் செய்யுமாறு வட மாகாண முன்னாள் முதலமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் உள்ளூர் மற்றும் புலம்பெயர் தமிழ் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

‘நம்பிக்கைப்பொறுப்பு’ என்ற நன்கொடை அமைப்பின் வங்கிக் கணக்குக்கு விரும்பியவர்கள் முடிந்தளவு நிதியை அனுப்புமாறும் கிடைக்கும் நிதி மற்றும் செலவழிக்கும் பணம் ஆகியவற்றுக்கான கணக்கு அறிக்கை ஊடகங்களில் வெளியிடப்படும் என்றும், வழங்கப்படும் நிதிக்கான பற்றுச்சீட்டும் தனித்தனியாக அனுப்பிவைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

15

## எக்ஸ் பிரஸ் கப்பல் கப்டனுக்கு பிணை

கொழும்பு, ஜூன் 15

குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்று கைதுசெய்யப்பட்ட ‘எக்ஸ் - பிரஸ் பேர்ள்’ கப்பலின் தலைமை மாலுமி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இவர் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான சொந்தப் பிணையில் விடுவிக்க நீதிவான் உத்தரவிட்டார்.

எனினும், கப்பலின் கப்டன் நாட்டிலிருந்து

15

## பயங்கரவாத தடை சட்டத்தை அரசாங்கம் சிறுபான்மையினர்மீது பயன்படுத்தவில்லை

### ஐரோப்பிய ஒன்றிய தூதுவர்களிடம் அமைச்சர் தினேஷ்

கொழும்பு, ஜூன் 15,

இலங்கை தொடர்பில் ஐரோப்பிய பாராளுமன்றத்தில் கடந்த 10 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் தன்னுடைய கவலையை நேற்று உத்தியோகபூர்வமாகத் தெரிவித்திருக்கின்றது. கொழும்பிலுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின்

15






## இலங்கையை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து டில்லி மீள்பரிசீலனை

### இந்திய முன்னணி தினசரி வெளியிடும் புதிய தகவல்

புதுடில்லி, ஜூன் 15

இந்து சமுத்திரத்தில் சீனா ஆழமாகக் கால்பதிப்பதால் இலங்கையுடனான உறவுகள் குறித்து இந்தியா மறுபரிசீலனை செய்து வருவதாக புதுடில்லி வட்டாரங்களை ஆதாரம் காட்டி இந்தியாவின் பிரபல தினசரியான ‘தி பிரின்ட்’ செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து ‘தி பிரின்ட்’ மேலும் தெரிவித்துள்ளதாவது:

“ராஜபக்ஷ அரசாங்கம் மீண்டும் ஆட்சிக்கு வந்த பின்னர் கொழும்புடனான உறவுகளிற்கு புத்துயிர் கொடுக்கும் நோக்கத்துடன் காணப்பட்ட புதுடில்லி, தற்போது இந்தியாவை சமநிலையில் வைத்திருப்பதை கைவிட்டு சீனாவின் பக்கம் சாய்வது குறித்த உறுதியான நிலைப்பாட்டை கொழும்பு எடுத்துள்ளதாக கருது

15

## இப்படியும் நடக்கிறது...!

மதுரையில் கல்லூரி விழா ஒன்றில் சிறப்பு சொற்பொழிவாற்ற கவிஞர் கண்ணதாசன் அழைக்கப்பட்டிருந்தார். விழா அரங்கு முழுவதும் மாணவர்கள். குறித்த நேரத்தில் கவியரசர் வரவில்லை. மாணவர்கள் விசிலடித்து சத்தம் போட தொடங்கிவிட்டனர்.

ஒரு வழியாக ஒரு மணி நேர தாமதத்தில் வந்து சேர்ந்தார் கவிஞர்.

கல்லூரி முதல்வர் வரவேற்புரை நிகழ்த்திய போதுகூட மாணவர்களிடையே சலசலப்பு குறையவில்லை.

பின்னர் கண்ணதாசன் பேச ஆரம்பித்தார், “ஒரு சிலருக்கு இந்து மதம் பிடிக்கும். சிலருக்கு இஸ்லாமும், சிலருக்கு கிறிஸ்தவ மதமும் பிடிக்கும். எனக்குப் பிடித்த மதம்...” என்று சொல்லி நிறுத்தினார்.

மாணவர்களிடையே மயான அமைதி. அவர் என்ன சொல்லப் போகிறார் என்று அனைவருக்கும் ஆவல்.

அவர் தொடர்ந்தார், “எனக்குப் பிடித்த மதம் தாமதம்” என்று சொன்னவுடனேயே பலத்த கரவொலி எழுந்தது.

அதன் பின்னர் அவர் தாமதத்துக்கு மன்னிப்புக் கேட்டுவிட்டு தன் பேச்சைத் தொடர்ந்தார்.

ஒரு சிறந்த பேச்சாளருக்கு, ஏன் தலைவருக்கும்தான், ஓர் இக்கட்டான வேளையில் எப்படி முடிவு எடுப்பது என்பது தெரிந்திருக்கவேண்டும். இவ்வாறு ஓர் இக்கட்டான நிலையில் எப்படி முடிவெடுக்கவேண்டும் என்பதில் ரணில் ஒரு விண்ணன் என்பதை நேற்றைய தினம் இந்தப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

இதனைப்படித்த நண்பர் ஒருவர் யாழ்ப்பாணத்திலிருந்து தொடர்பு கொண்டார்.

ரணில் பாராளுமன்றம் செல்லவிருப்பது பற்றிய நேற்றைய பதிவில் ஒரு விசயத்தை குறிப்பிடத் தவறிவிட்டதாக அவர் கடிந்து கொண்டார்.

‘கூட்டமைப்பை பாருங்கோ. கடந்த தேர்தலில் படுதோல்வி அடைந்தது. அந்தத் தோல்விக்கு பலரும் அடிக்கடி ஒருவரை மட்டுமே கைநீட்டுவர். ஆனால், அவர் எப்படியோ பாராளுமன்றம் சென்றுவிட்டார்.

“அதேபோலத்தான், ஐக்கிய தேசியக் கட்சியின் இந்த படுமோசமான தோல்விக்கு வேறுயாரும் காணரமல்லர். ரணில் ஒருவர்தான் காரணம் என்பதும் தெரிந்ததே. ஆனால், ரணிலும் இப்ப பாராளுமன்றம் போகப் போகிறார் பார்த்தீரோ இதனை நீர் குறிப்பிட்டிருக்கவேணும்” என்றார் அவர்.

எப்போதும் ஒருவர் ஒரு கருத்தைச் சொன்னால் அதற்கு மறுகருத்து- எதிர்க்கருத்து சொல்லியே பழக்கப்பட்டுவிட்ட ஊர்க்குருவியர் விடவில்லை.

“கூட்டமைப்பின் தோல்விக்கு நானும்தான் சில வேளையில சிலரை கைகாட்டியிருக்கிறன். ஆனால், அது மட்டும் காரணம் எண்டு சொல்ல ஏலாது”, என்றேன்.

“ஒருவர் உங்களிட்ட கொஞ்சக் காசு தேவை எண்டு கேட்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் இப்ப உங்களிடம் இல்லை என்கிறீர்கள். அவரோ தொடர்ந்து உங்களிடம் கேட்டுக்கொண்டே இருக்கிறார். நீங்களோ இல்லை பிறகு தாறன் எண்டு சொல்லிக்கொண்டே இருக்கிறீர்கள் என்றால் அவர் உங்களை நம்பிக்கொண்டு காலத்தை கடத்துகிறார். இப்படியே காலம் கடக்கிறது என்றால் அதன் அர்த்தம் அவருக்கு அந்தக் காசுத் தேவை இருக்கவில்லை. உங்களிட்ட சும்மா கேட்டுக்கொண்டு இருக்கிறார். உண்மையில் அவருக்குக் காசுத் தேவை இருக்கிறது என்றால் அவர் என்ன செய்வார், வேறு ஒருவரிடம் கேட்டுவாங்கப் பார்ப்பார்”, என்றேன்.

“தீர்வு தாருங்கள்”, என்று கூட்டமைப்பிடம் கேட்டுக்கொண்டு காலத்தை கடத்திய தமிழ் மக்கள் இனியும் அவ்வாறு காலம் கடத்த விரும்பவில்லை. இதைத்தான் கடந்த தேர்தலில் மக்கள் கூட்டமைப்புக்கு வாக்களிக்காமல் விட்டது என்றும் வைத்துக்கொள்ளலாம்” என்றேன் நான்.

“அவர்களுக்கு தேவையான காசை வேறுயாரிடமாவது கேட்டுப் பார்ப்போம் என்று இப்போது வேறு சிலரிடம் கேட்கத் தொங்குகிறார்கள்”, என்றேன் நான்.

- ஊர்க்குருவி.

# அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

## சரத் பொன்சேகா எம்.பி.

கொழும்பு, ஜூன் 15

எரிபொருள் விலை அதிகரிப்பு உட்பட மக்களை நெருக்கடிக்கு உள்ளாக்கும் வகையிலான பல தீர்மானங்கள் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதே நிலைமை தொடருமாயின் நாட்டையும் மக்களையும் பாதுகாப்பதற்காக அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வருவது தொடர்பில் கவனம் செலுத்துவோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்கா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், உலக சந்தையில் எரிபொருள் பரல் ஒன்றின் விலை 20 டொலர் வரை குறைவடைந்த போதிலும், அதன் மூலம் பயன்பெறக்கூடிய சலுகையை இந்த அரசாங்கம் மக்களுக்கு வழங்கவில்லை. மாறாக இதன் மூலம் கிடைக்கும் இலாபத்தின் ஊடாக நிதியமொன்றை ஸ்தாபித்து மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாக தெரிவிக்கப்பட்டது.

ஆனால், இன்று வரை அதற்கான எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தனவந்தர்களுக்கு வரி சலுகையை வழங்கியமையால் அரசாங்கத்திற்கு பெரும் நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அதனால், தற்போது அந்த சுமையை மக்கள் மீது இறக்க முயற்சிக்கின்றனர். இதனை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம்.

அரசாங்கத்தின் இவ்வாறான செயல்பாடுகளுக்கு எதிராக பாராளுமன்றத்தின் ஊடாக மிகக் கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதோடு, தேவையேற்படின் நம்பிக்கையில்லா பிரேரணையை சமர்ப்பிப்பதற்கும் எதிர்க்கட்சி என்ற ரீதியில் பின்வாங்கப் போவதில்லை. இதுவே எமது எதிர்பார்ப்பாகும்.

எந்தவொரு விடயத்தையும் முறையாக செய்து முடிக்க முடியாத மற்றும் முக்கிய தீர்மானங்களை ஸ்திரமாக எடுக்க முடியாத அரசாங்கத்தின் இயலாமை எரிபொருள் விலை அதிகரிப்பின் ஊடாக வெளிப்பட்டுள்ளது. விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் ஒரு விடயத்தைக் கூறுகின்றார். சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் வெளிநபர் அல்ல. அதே போன்று பொதுஜன பெரமுனவும் அரசாங்கமும் வெவ்வேறானவை அல்ல. அவ்வாறிருக்கையில் இவர் பிறிதொரு கதையைக் கூறுகின்றனர்.

எவ்வாறிருப்பினும் உண்மை பிரச்னையான எரிபொருள் விலை விவகாரம் மறைக்கப்படுவதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. மக்களுக்காக தொடர்ந்தும் போராடுவோம் - என்றார். (ஐ)



# தமிழ் தேசிய பசுமை இயக்கத்தால் உலருணவு பொதிகள் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தால் கொரோனாப் பேரிடர் காரணமாகத் தொழில் வாய்ப்பிழந்ததால் பொருளாதார ரீதியாக நலிவுற்றிருக்கும் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

கொரோனா நோய்த் தொற்றுக் காரணமாகத் தனிமைப் படுத்தப்பட்டதாலும், பல வாரங்களாக நாடு முழுமையாக முடக்கப்பட்டு இருப்பதாலும் அன்றாடம் வேலை செய்து பிழைக்கும் குடும்பங்கள் வாழ்வாதாரமின்றிப் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனைக் கருத்தில்கொண்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் சித்திரைப் புத்தாண்டு தினத்திலிருந்து அடையாளம் காணப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கி வருகின்றது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நல்லூர் அரசடி, திருநெல்வேலி பிள்ளையார் வீதி, அரியாலை இராஜேஸ்வரி வீதி, கொக்குவில் கிழக்கு காளி கோவிலடி, உரும்பிராய் பழைய ஆஸ்பத்திரி வீதி, உரும்பிராய் பூதனார் கோயிலடி ஆகிய பகுதிகளிலுள்ள 250 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் இப் பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்துள்ளார். (இ)

## மரண அறிவித்தல்



தோற்றம் 07.02.1941

மறைவு 13. 06. 2021

### திருமதி லில்லி திரேஸ் மயில்வாகனம்

கொழும்பு 2 ஐப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், கனடா Toronto ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட லில்லி திரேஸ் மயில்வாகனம் நேற்றுமுன்தினம்(13-06-2021) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான தம்பு ராஜேந்திரம் - மேரிகிறேஸ் தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை -செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும்,மயில்வாகனம் அவர்களின் பாசமிகு மனைவியும்,பிரேமராணி, கமலராணி, செல்வராணி, நிமலராணி, காலஞ்சென்ற நிமலராஜன் (ஊடகவியலாளர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரீட்டா, காலஞ்சென்றவர்களான ரோஸ், ஆண்டனி, அரியரட்ணம், விஜயரட்ணம் மற்றும் ரூபி ஆகியோரின் அன்புச் சகோதரியும்,லோகநாதன், ஜெகதீஸ்வரி, காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் கணேசலிங்கம் ஆகியோரின் அருமை மைத்துனியும்,ஜெகதாஸ், பரிமளகாந்தி, யோகராஜா, நிரஞ்சன் மற்றும் ஜீவராஜா ஆகியோரின் பாசமிகு மாமியாரும்,பிரேம்ஜி, பிரசன்னா, துவாரகா, பிரவிந்தன், நிவேதா, தீப்திகா, நிசாந்தி, நிதர்சன், டிலக்ஷன், பிரியங்கா, ஷாரங்கா, நிவேதிக்கா, நிலக்ஷனா, நிமலராஜன் (Jr), அகன்சியா ஆகியோரின் பாசமிகு பாட்டியும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
ராணி - மகள் : +16479069568

தகவல்: குடும்பத்தினர்.

ஈழநாடு
Eelanadu
15.06.2021 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், வைகாசி 31

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# ஆட்சிக் கவிழ்ப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கிட்டத்தட்ட செயலிழந்துவிட்டார். இந்த நிலையில்/ யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனே கூட்டமைப்பின் தலைவர்போன்று செயல்பட்டுவருகின்றார். தென்னிலங்கை ஊடகங்களைப் பொறுத்தவரையில், சுமந்திரனே தமிழ் மக்களின் பிரதான தலைவர். சுமந்திரன் கூறும் கருத்துக்களுக்கு மட்டுமே சிங்கள, ஆங்கில ஊடகங்கள் முக்கியத்துவம் வழங்குகின்றன. இதன்மூலம், சம்பந்தனின் இடத்தை சுமந்திரன் சத்தமில்லாமல் எடுத்திருக்கின்றார்.

ஆனால், சுமந்திரன் கூறும் கருத்துக்கள்தொடர்பில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களோ வாய் திறப்பதில்லை. அவர்கள் உடன்படுகின்றனரா அல்லது இல்லையா என்பதைக்கூட ஒருவர் அறிந்துகொள்ளமுடிவதில்லை. “கூட்டமைப்பிலிருந்து வெளியேறும் எண்ணத்தில் நாங்கள் இல்லை” - இப்படியான ஓர் அறிக்கை மட்டுமே அவர்களிடமிருந்து அவ்வப்போது வெளிவருகின்றது. இதுபற்றி மக்களுக்கு என்ன அக்கறை?

சுமந்திரன் அரசாங்கத்தை விமர்சிப்பது புதிய சங்கதியல்ல. ஆனால், அவர் தற்போது ஆட்சி கவிழ்ப்பு தொடர்பில் பேசியிருப்பது முக்கியமானது. “அரசாங்கம் இப்படியே சென்றால், ஏனைய எதிர்க்கட்சிகளுடன் இணைந்து, ஆட்சியை கவிழ்ப்பதற்கு வெளிப்படையாவவே செயல்படுவோம்”, என்று சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார். ஆளும் பொதுஜன பெரமுனவிற்குள் நெருக்கடிகள் தலைதூக்கியிருக்கின்ற நிலையிலும், ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பாராளுமன்றம் செல்லவுள்ள நிலையிலும் சுமந்திரன் இவ்வாறானதொரு கருத்தை வெளியிட்டிருக்கின்றார். அரசாங்கம் நெருக்கடியில் இருப்பதான தோற்றம் தெரிகின்றது. அரசாங்கத்தின் கூட்டணி கட்சிகளின் தலைவர்களுக்கும் பொதுஜன பெரமுனவிற்கும் இடையில் முரண்பாடுகள் காணப்படுகின்றன. எரிபொருள் விலையேற்றத்தை முன்வைத்து அரசாங்கத்திற்குள் விவாதங்கள் இடம்பெறுகின்றன. இவ்வாறானதொரு சூழலில்தான் சுமந்திரன் ஆட்சி கவிழ்ப்பு தொடர்பில் பேசியிருக்கின்றார்.

2015இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தில் கூட்டமைப்பும் பிரதான பங்கு வகித்திருந்தது. சம்பந்தனும் சுமந்திரனுமே கூட்டமைப்பின் சார்பில் ரணில் தரப்புடன் இணைந்து செயல்பட்டனர். பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள், ஒரு கட்டம் வரைக்கும் விடயங்களை அறிந்துகொள்ளவில்லை. இத்தனைக்கும் அப்போது கூட்டமைப்பின் பேச்சாளராக இருந்த சுரேஷ் பிறேமச்சந்திரனுக்குக்கூட எந்தவொரு விடயமும் தெரிந்திருக்கவில்லை. ஆட்சி மாற்றத்திற்கான திட்டமிடலில் பிரதான செயல்பாட்டாளரான மங்கள சமரவீரவுடன், உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதி சுரேன் சுரேந்திரன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் சிங்கபூரில் இரகசியமாக சந்தித்துக்கொண்ட செய்தி, பின்னர் வெளியானது.

இப்படியான கடந்த கால வரலாறு இருக்கின்ற நிலையில், தற்போது சுமந்திரன் “ஆட்சியை கவிழ்ப்போம்” என்று கூறுவதால் உண்மையிலேயே பயனடையப் போவது யார்? தற்போதைய அரசாங்கம் மிகவும் வெளிப்படையான தமிழர் விரோத நிகழ்ச்சிநிரலை முன்வைத்தே ஆட்சியைக் கைப்பற்றியிருக்கின்றது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தன்னை ஒரு சிங்கள - பௌத்த தலைவன் என வெளிப்படையாகவே அறிவித்திருக்கின்றார். இந்த விடயத்தில் அவர்களிடம் ஒளிவுமறைவில்லை. இவ்வாறான நிலையில், தமிழர்களால் மீளவும் தாங்கள் தோற்கடிக்கப்படுவதா என்னும் பிரசாரத்தை செய்வதற்கு சுமந்திரனின் கருத்துக்கள் பயன்படக்கூடிய வாய்ப்புண்டு.

ஆட்சி மாற்றத்திற்கான சூழல் கனியும்போது, மாற்றம் ஏற்படலாம். ஆனால், தமிழர்கள் இதில் பிரதான பாத்திரத்தை வகிக்கமுடியாது. ஏனெனில், தமிழர்களுடன் அதிகம் நெருங்கினால் தென்னிலங்கையில் சிங்கள மக்களின் ஆதரவைப் பெறமுடியாது என்னும் நிலைமை காணப்படுகின்றது. இந்த நிலையில் சுமந்திரனின் ஆட்சி கவிழ்ப்பு கதைகள் எதிரணியினரையும் பலவீனப்படுத்திவிடக்கூடியவை.

# அவதியுறும் இலங்கைத் தமிழ் அகதிகள்

- அலசுவது **இராஜதந்திரி** -

ஓரிரு தினங்களுக்கு முன்னர் ஜேர்மனியிலிருந்து சுமார் 28 இலங்கை தமிழ் அகதிகள் கொழும்புக்கு திருப்பியனுப்பப்பட்டிருந்தனர்.

இதற்கு முன்பதாக 30 இலங்கைத் தமிழ் அகதிகள் ஜேர்மனியிலிருந்து திருப்பியனுப்பப்பட்டிருந்தனர். இலங்கையிலிருந்து வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் அகதிகள் எண்பதுகளின் ஆரம்பத்தில் யுத்த அவலத்தை தாக்குப்பிடிக்க முடியாதவர்களாக ஆயிரக்கணக்கில் இந்தியாவில் தஞ்சமடைய ஆரம்பித்தனர். இதன் பின்னர் வடக்கு-கிழக்கு யுத்தம் மூன்று தசாப்த காலமாக இடம்பெற்ற காலப்பகுதியில் உலகின் அனைத்து பாகங்களையும் நோக்கி இலங்கைத்தமிழர்கள் அகதிகளாக புலம்பெயர ஆரம்பித்திருந்தனர்.

இன்று உலகில் புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழர்கள் காணப்படாத நாடே இல்லை என்று கூறுமளவுக்கு, அனைத்து உலக நாடுகளிலும் புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்கள் இருந்து வருகின்றனர். இருந்தபோதிலும், ஜேர்மனி, சுவிற்சர்லாந்து உட்பட ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் இலங்கைத் தமிழ் அகதிகளில் அநேகர் அவர்களது அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட நிலையில் இருந்துவருவதையே அவதானிக்க முடிகின்றது.

### அகதிகளின் துயரம்

ஓரிரு தினங்களுக்கு முன்னர் கொழும்புக்கு ஜேர்மனியிலிருந்து திருப்பியனுப்பப்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகள் கண்ணீரும் கம்பலையுமாக நாடு திரும்பியிருந்தனர். இலங்கை திரும்பியதும் எவ்வாறான ஒரு சூழ்நிலைக்கு தாம் முகங்கொடுக்க நேரிடும் என்ற அச்சத்துடனேயே அவர்கள் கொழும்பு திரும்பியிருந்தனர்.

எண்பதுகளின் ஆரம்பத்தில் அரச படைகளின் அச்சுறுத்தல் காரணமாக மட்டுமல்ல. தமிழ் ஆயுதப் போராட்டக் குழுக்களிடையே நிலவிய போட்டித்தன்மை காரணமாகவும், இதனால் ஏற்பட்ட சகோதரப் படுகொலைகள் என்று விபரிக்கப்பட்ட மோதல்கள் காரணமாகவும் ஆயிரமாயிரம் இலங்கைத்தமிழ் அகதிகள் புலம்பெயரவேண்டிய நிர்ப்பந்தத்துக்குளானார்கள்.

இந்நிலையில், ஜேர்மனி உட்பட பல ஐரோப்பிய நாடுகள் புகலிடம் நிராகரிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகளை தற்சமயம் படிப்படியாக திருப்பி அனுப்ப ஆரம்பித்துள்ளன. ஓரிரு தினங்களுக்கு முன்னர் ஜேர்மனியிலிருந்து திருப்பியனுப்பப்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பியனுப்ப வேண்டாம் என்று ஆர்ப்பாட்டங்கள்கூட ஜேர்மனியில் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த முகாமுக்கு வெளியே நடத்தப்பட்டிருந்தன.

இருந்தபோதிலும், ஜேர்மன் பொலிஸார் தயவுதாட்சண்யமின்றி தமது கடமையை செய்திருந்தனர். விசேடமாக கொண்டுவரப்பட்ட வாகனங்களில் இவர்கள் ஏற்றப்பட்டு, அங்கிருந்து பிராங்போர்ட் விமான நிலையத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு கொழும்புக்கு திருப்பியனுப்பப்பட்டனர்.

இலங்கைத் தமிழ் அகதிகளை ஏற்றிய பொலிஸ் வாகனங்கள் பிராங்பேர்ட் விமான நிலையம்நோக்கி சென்ற பாதையின் இருமருங்கிலும் ஜேர்மனியில் இருக்கின்ற புகலிடம் பெற்ற இலங்கைத் தமிழர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

இருந்தபோதிலும், ஜேர்மன் பொலிஸார் அவர்களது ஆர்ப்பாட்டங்களை கண்டுகொள்ளாத நிலையில், புகலிடம் நிராகரிக்கப்பட்ட இந்த இலங்கைத்தமிழ் அகதிகளை நாடு கடத்தியிருந்தனர்.

2009ஆம் ஆண்டு மே மாதம் இலங்கையில் வடக்கு-கிழக்கு யுத்தம் முடிவுக்கு வந்ததையடுத்து இலங்கையில் அமைதி நிலை திரும்பியுள்ளதாகவும் எனவே, மீளவும் தமது சொந்த இடங்களில் சென்று வாழமுடியும் என்றும் கூறியே இவர்கள் ஜேர்மனியிலிருந்து திருப்பியனுப்பப்பட்டுள்ளனர்.

இருந்தபோதிலும், பல ஆண்டுகளுக்கு முன்னர் ஐரோப்பாவிலும் ஏனைய நாடுகளிலும் தஞ்சம் கோரிய இலங்கைத் தமிழர்கள், யுத்தம் முடிவுற்ற நிலையில் மீளவும் இலங்கைக்கு திருப்பியனுப்பப்படுகின்ற நிலையில் அவர்கள் தமது இளமையை தொலைத்தவர்களாகவும் தற்சமயம் மூப்படைந்தநிலையிலும் தமது கையிருப்பிலுள்ள அகதிக் கொடுப்பனவுகளுடன் மட்டுமே நாடு திரும்பவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளனர். எனவே, அவர்கள் மீளவும் இலங்கை வந்து ஒரு புதிய வாழ்க்கையை ஆரம்பிப்பது சிரமமானதொன்றாகவே அமையும்.

அகதிகளாக வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் தமது சேமிப்புக்களை செலவுசெய்தும் நிலபுலன்களை விற்றுமே வெளிநாடுகளுக்கு சென்றிருந்தனர். ஆனால் அவர்கள் தற்போது மீளவும் வந்து ஒரு புதிய வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கான அடித்தளமிடுவது சிரமமானதாகவே இருக்கும்.

### மனிதாபிமான அணுகுமுறையின் அவசியம்

இதுவிடயத்தில் இலங்கையரசு வெளிநாடுகளிலிருந்து திருப்பியனுப்பப்படுகின்ற இலங்கைத் தமிழ் அகதிகளின் பாதுகாப்பை உறுதிசெய்வததோடு, அவர்களை மீளவும் புதியதொரு வாழ்க்கை ஆரம்பிப்பதற்கான அனைத்து உதவிகளையும் வழங்கவேண்டியது அவசியமானதா கின்றது.

இந்தியாவின் தமிழகத்தில்கூட 95 ஆயிரம் இலங்கைத்தமிழ் அகதிகள் இருப்பதாக அண்மையில் கணக்கிடப்பட்டுள்ளது. யுத்தம் முடிவுற்றதும் குறிப்பிடத்தக்களவு அகதிகள் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு திருப்பியனுப்பப்பட்டிருந்தனர்.

இதேவேளை இருதினங்களுக்கு முன்னர், தமிழகத்தில் கனடா செல்வதற்கு தயாரான நிலையில் இருந்த இலங்கைத் தமிழ் அகதிகள் சிலர் கைது செய்யப்பட்டிருந்தனர். படகுமூலமாகவே இவர்கள் ஆபத்தான பயணமொன்றை மேற்கொண்டு கனடாவுக்கு செல்லும் முயற்சிகளில் இறங்கியிருந்தனர். ஆனால், தற்போது அவர்கள் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியா உட்பட பலநாடுகள் அகதிகளை தாம் ஏற்கப்பொவதில்லையென்று அழுத்தம் திருத்தமாக தெரிவித்துள்ளன. இந்நிலையில், இலங்கையில் யுத்தம் முடிவுற்ற நிலையில் வெளிநாடுகளிலிருந்து திருப்பியனுப்பப்படும் இலங்கைத்தமிழ் அகதிகளை பாதுகாப்போடு அவர்களது புதியவாழ்க்கையை உறுதிசெய்வதற்கான வேலைத்திட்டமொன்றை இலங்கையரசு தயாரிக்கவேண்டியதும் அவசியமானதாகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஜுன் - 15 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம் - ஆனி 01 - கரிநாள்
நல்ல நேரம் : 10.23 - 11.53
ராகு காலம் : 2.53 - 4.23
திதி : பஞ்சமி



## இன்றைய ராசிபலன்

**15.06.2021**

**மேடம்**
பகைத்த சொந்தபந்தங்கள் உங்களைத் தேடி வருவார்கள். பல காலம் திட்டமிட்டபடி புதிதாக வாகனம் வாங்குவீர்கள். சேமிப்புக்கூடும். புதிய நண்பர்களின் அறிமுகம் ஏற்படும்.

**இடபம்**
வீட்டுப் பராமரிப்புச் செலவுகள் குறையும். குடும்ப நலம் கூடும் உற்சாகம் பெருக்கெடுக்கும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். மற்றவர்களுடன் வீண் விவாதத்தைத் தவிர்த்து மகிழ்வீர்கள்.

**மிதுனம்**
உறவினர்களால் ஏற்பட்ட பிரச்னை நீங்கி நிம்மதி வரும். சுபச்செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. வாகன யோகம் வரும். தாயாரின் உடல்நலன் நன்றாக இருக்கும்.

**கடகம்**
தொடங்கும் முயற்சி இழுபறியானாலும் அனுகூலமாக முடியும். பெரியோருக்கு உதவி செய்து ஆசி பெற்று மகிழ்வீர்கள். பிள்ளைகளுடன் அதிக கண்டிப்பின்றி நடந்துகொள்ள முயலுங்கள்.

**சிம்மம்**
வாழ்க்கைத் துணையால் வெற்றியும் மகிழ்ச்சியும் உண்டாகும். புதிய முயற்சிகளுக்கு குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும். அன்றாட விஷயங்கள் மாறுதலின்றி நடைபெறும்.

**கன்னி**
அதிர்ஷ்டத்தால் அன்றி வரவு கடின உழைப்பால் வரும். வாழ்க்கைத்துணையின் முயற்சியால் குடும்ப மகிழ்ச்சி கூடும். குடும்ப உறுப்பினர்களுக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும்.

**துலாம்**
எதிர்ப்போரிடம் கூடக் கனிவாக பேசி நல்ல பெயர் எடுப்பீர்கள். உறவினர்களிடம் பக்குவமாக நடந்து கொள்வது நன்மையளிக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி கூடும்.

**விருட்சிகம்**
புதிய முதலீடுகள் வேண்டாம். சகோதரர்களால் நன்மையும் சங்கடமும் ஏற்படக்கூடும்.பலரும் உங்கள் ஆலோசனையைக் கேட்டுச் செயல்படுவார்கள்

**தனுசு**
முன்னேற்றம் கூடும் நாள். கவனமாகப் பேசினாலும் சிரமம் வரும். நண்பர்கள், உறவினர்களிடம் வீண் தகராறு செய்ய வேண்டாம். மனதில் சிறுசிறு குழப்பங்கள் தோன்றி மறையும்.

**மகரம்**
குடும்பத்தில் உங்களால் வாக்குவாதம் வராமல் கவனமாக இருங்கள். பணியாளர்களுக்கு வரவேண்டிய தொகை கைக்கு வந்து சேரும். அலுவலகத்தில் எதிர்பாராத ஒரு வேலை முடியும்.

**கும்பம்**
மனதில் இருந்துவந்த சலிப்பு அகலும். கலகலப்பான சூழல் உண்டு. கவனமாய்ச் செய்யும் விஷயங்களில் சிறிதுலாபமடைவீர்கள். புகழ் கூடும். சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். எதிரிகளை வெல்வீர்கள்.

**மீனம்**
உங்களுக்குக் கீழ்ப்பணிபுரிபவர்களிடம் பொறுமை காட்டுங்கள். நண்பர்களால் உயரும் நாள். ஆரோக்யம் நல்ல முறையில் இருக்கும். உழைப்பால் பெருமையும் வருமானமும் நல்ல முறையில் வரும்.

# மருத்துவ சிகிச்சை பெற தனி விமானத்தில் அமெரிக்கா செல்வதற்கு ரஜினி திட்டம்

## மத்திய அரசு அனுமதி; குடும்பத்தினரும் செல்வார்கள்



*சென்னை, ஜுன் 15,*

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர் ரஜினி காந்த். உடல்நிலை காரணமாக மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக தனி விமானம் மூலம் அமெரிக்கா செல்ல உள்ளார் என தகவல் வெளியாகி உள்ளது. அவருடன் அவரது குடும்பத்தினரும் அமெரிக்கா செல்லவுள்ளார்கள்.

இந்தியாவில் கொரோனா வைரஸின் இரண்டாம் அலையின் தீவிரம் காரணமாக சர்வதேச விமானப் போக்குவரத்தில் தடை தொடரும் நிலையில், மருத்துவ சிகிச்சைக்காக தனி விமானம் மூலம் அமெரிக்கா செல்ல உள்ளார் ரஜினி.

இந்த நிலையில், சிறப்பு விமானம் மூலம் அமெரிக்கா செல்வதற்காக மத்திய அரசிடம் அனுமதிக்காக கோரிக்கை விடுத்திருந்த நிலையில், மத்திய அரசு அதற்கான அனுமதியை வழங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், இது தொடர்பாக இரு மத்திய அமைச்சர்களை ரஜினி தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு உரையாடி உள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

14 பேர் வரை பயணிக்கும் வசதி கொண்ட சிறப்பு தனி விமானத்தில், ரஜினியும் அவரது குடும்பத்தினரும் அமெரிக்கா செல்ல உள்ளதாகவும், மருத்துவச் சிகிச்சைக்குப் பின்னர் சிறிது காலம் அங்கு ஓய்வெடுக்க உள்ளரென தகவல் கள் வெளியாகி உள்ளன.

# தமிழ்நாடு அரசின் டில்லி பிரதிநிதி நியமனம்

*சென்னை, ஜுன் 15,*

தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் வரும் 17ஆம் திகதி பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்க நேரம் கேட்டுள்ள நிலையில், தமிழக அரசின் டில்லிக்கான சிறப்பு பிரதிநிதியாக ஏ.கே.எஸ்.விஜயன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து தமிழ்நாடு தலைமைச் செயலாளர் இறையன்பு வெளியிட்டுள்ள உத்தரவில் “தமிழக அரசின் டில்லி சிறப்பு பிரதிநிதியாக தி.மு.க. வின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான ஏ.கே.எஸ்.விஜயன் நியமிக்கப்பட்டுள்ளார். தி.மு.க. விவசாய அணியின் செயலாளராக உள்ள இவர் ஓராண்டு காலம் சிறப்பு பிரதிநிதியாக செயல்படுவார். விரைவில் இவர் பதவி ஏற்றுக் கொள்வார்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் மக்களவைத் தொகுதியிலிருந்து 1999, 2004, 2009 என மூன்றுமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு டில்லி சென்றவர் ஏ.கே.எஸ். விஜயன்.



டில்லி பிரதிநிதி என்பவர் தமிழ்நாடு அரசுக்கும் ஒன்றிய அரசுக்கும் இடையே பாலமாகச் செயல்படுவார். மாநில அரசின் கோரிக்கைகளை மத்திய அமைச்சரவை முன்பு எடுத்துவைப்பார். இங்கிருந்து அனுப்பப்படும் கடிதங்கள், கோரிக்கை மனுக்கள் மீதான நடவடிக்கைகளைக் கவனிப்பார். தமிழ்நாடு அமைச்சர்களுக்கு இணையான அதிகாரம் டில்லி பிரதிநிதிக்கும் உண்டு. தலைமை செயலகத்தில் அமைச்சர்கள் இருக்கும் இடத்தில் இவருக்கும் ஓர் அறை ஒதுக்கப்படும். தமிழக முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் டில்லி சென்று பிரதமரை சந்திக்கும்போது சிறப்பு பிரதிநிதி உடன் இருப்பார்.

# கொரோனா தொற்று தீவிரம் குறைந்ததும் தொண்டர்களை நேரில் வந்து சந்திப்பேன்

## தமிழக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தும் சசிகலா



*சென்னை, ஜுன் 15,*

“தற்போதுள்ள கொரோனா தீவிரம் குறைந்ததும் தொண்டர்களை நிச்சயம் நேரில் வந்து சந்திப்பேன்” என தொண்டர் ஒருவரிடம் சசிகலா பேசிய குரல் பதிவு தமிழக அரசியலில் மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழக அரசியலில் திடீர் திருப்பமாக சசிகலாவின் பெயர் மீண்டும் முக்கியத்துவம் பெற தொடங்கியிருக்கிறது. தொண்டர்களுடன், சசிகலா பேசும் குரல் பதிவுகள் அவ்வப்போது சமூக வலைதளங்களில் வெளியாகி வைரலாக பரவி வருகிறது. இதனால் அரசியல் களம் மீண்டும் பரபரப்படைய தொடங்கியிருக்கிறது.

அந்தவகையில் முன்னாள் எம்.பி.யும், முன்னாள் எம்.எல்.ஏ.வும், அகில உலக எம்.ஜி.ஆர். மன்ற இணை செயலாளருமான சின்னசாமியிடம், சசிகலா பேசும் ஒலிப்பதிலு ஒன்று நேற்று முன்தினம் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது. அவரிடம், சசிகலா பேசும் போது, ”இப்போ கொரோனா காலம். ஜாக்கிரதையாக இருங்க… நிலைமை ரொம்ப மோசமாக இருக்குது. இப்போ இரண்டு நாளாக கொரோனா குறைஞ்சுட்டு வருது. கொரோனா தீவிரம் குறைஞ்ச பிறகு உங்க எல்லாரையும் நான் சந்திப்பேன்” எனக் கூறியிருக்கின்றார்.

இதனைவிட மேலும் பலருடன் அவர் பேசும் குரல் பதிவுகள் நேற்று வெளியிடப்பட்டு, தமிழக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# தமிழரின் பிரதேசங்களில் சீனாவின் ஆக்கிரமிப்பை அனுமதிக்கக்கூடாது

## பைடனுக்கான தமிழர் அமைப்பு கோரிக்கை

வாஷிங்டன், ஜூன்15

**சீன ஆக்கிரமிப்பாளர்களின் காலனித்துவ மனநிலைக்கு வடக்கு, கிழக்கு தமிழர் தாய கப் பகுதி மக்கள் ஒத்துழைப்பு வழங்கக் கூடாது என பைடனுக்கான தமிழர்கள் அமைப்பு வலி யுறுத்தியுள்ளது.**

சீனாவின் ஆக்கிரமிப்புக்கு ஒத்துழைப்பு வழங்கு வோர் மற்றும் ஆக்கிரமிப்புக்களை மௌனமாக வேடிக்கை பார்ப்போரை தமிழர்களின் அழிவுக்கான காரணகர்த்தாக்களாகவே சரித்திரம் எழுதும் என பைடனுக்கான தமிழர்கள் அமைப்பினர் பணிப்பாளர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

சீன ஆக்கிரமிப்பை ஆதரிக்க வேண்டாம் என்று நாங்கள், பைடனுக்கான தமிழர்கள், தமிழ் அரசியல் வாதிகள் மற்றும் தமிழ் பத்திரிகையாளர்களை வேண் டிக்கொள்கிறோம்.

சீன ஊடுருவலை தமிழ் சமூகத்தைச் சேர்ந்த எவரும் ஆதரிக்கக் கூடாது அல்லது எப்படியாவது வசதி செய்ய கூடாது. மாறி உதவினால் வரலாறு அவர்களை அழி யாத இருண்ட கறுப்பு அடையாளங்களுடன் வரைந்து விடும்.

சீனா மிகவும் பேராசை கொண்ட நாடு, சுயநல மற்றும் முரட்டுத்தனமான அணுகுமுறை கொண்டது. சீன மக்கள் குடியரசு மோசமான மனித உரிமைகள் மீறல்களுக்கு பெயர் பெற்றது.

சீனர்கள் தற்போது சாவச்சேரி மற்றும் நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு ஆகிய மூன்று தீவுகளில் கால் பதித்து தங்கள் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

2009 ஆம் ஆண்டு இனப்படுகொலையில் முக்கிய பங்கு வகித்து சீனர்கள் தமிழர்களுக்கு அதிக சேதத்தை ஏற்படுத்தியுள்ளனர். கூடுதலாக, சீனா 2009 ஆம் ஆண்டில் 146,000 தமிழர்களைக் கொல்லவும் பாது காப்பு வலயத்துக்குள் தமிழர்களை தாக்கவும் இலட்ச கணக்கான குண்டுகள், ஆபத்தான எறிகணைகள், வெடி குண்டுகள் மற்றும் கொத்து குண்டுகளை அனுப்பியது.

2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில், தமிழருக்கு சார்பான அல்லது இலங்கைக்கு எதிரான எந்தவொரு தீர்மானத்திற்கும் ஐ.நா.பாதுகாப்புக் குழுவை 'வீட்டோ' செய்வதாக சீனா அச்சுறுத்தியது. இப்போது மீண்டும், குறிப்பாக கொழும்பு துறைமுக நகர உரிமையை எடுத்த பின்னர், ஐ.நா.பாதுகாப்புக் குழுவில் இலங்கைக்கு எதிரான எந்தவொரு தீர்மானத்தையும் இன்னும் 'வீட்டோ' செய்வதாக சீனர்கள் உலகுக்குத் தெரிவித்துள் ளனர்.

எல்லாவற்றையும் விட மோசமானது, வட,கிழக்கில் தமிழர்களை படுகொலை செய்ய இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டதற்கான ஆதாரங்களை அழிக்க சீனர்கள் இலங்கை இராணுவத்திற்கு உதவினர். இதை உள்ளூர் தமிழர்கள் தெரிவித்தனர்.

தமிழ் இனப்படுகொலையைத் தொடர இலங்கை யின் முயற்சிகளை சீனர்கள் எப்போதும் ஆதரிப்பார்கள். சீனாவிற்கு தார்மீக மதிப்புகள் இல்லை. அதன் சொந்த நிகழ்ச்சி நிரல் சக்திவாய்ந்த நாடுகளை அழிப்பதாகும்.

உய்குர் மக்களுக்கு எதிராக சீனா இனப்படுகொலை செய்து வருவதாக அமெரிக்கா கூறுகிறது. தமிழர் களைப் போலவே உய்குர்களும் பிரதானமாக சீனரல் லாத இனத்தினர் . உய்குர் மக்கள் சுயாட்சியை நாடிய தால் சீன அரசாங்கம் தமக்கு அச்சுறுத்தலாக கருதுகிறது.

உலகின் பொருளாதாரத்தை அழிக்க சீனா முயற்சிப் பதாக உலகம் சந்தேகித்தது, ஏனெனில், சீன அதிகாரிகள் உலக சுகாதார அமைப்பு புலனாய்வாளர்களுக்கு ஆரம்பகால கோவிட் -19 குறித்த மூல, தனிப் பயனாக் கப்பட்ட தரவுகளை வழங்க மறுத்துவிட்டனர், இது சீனாவில் கொரோனா வைரஸ் எவ்வாறு பரவத் தொடங்கியது, எப்போது என்பதை தீர்மானிக்க உதவும்.

இப்போது, தமிழர்கள் தாயகம் மீது படை யெடுப்பை சீனா மேற்கொண்டுள்ளதால், தமிழர்கள் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் காலனித்துவ காலத்தில் தமிழர்கள் பல தவறுகளைச் செய்தார்கள். அவர்கள் தனிப்பட்ட சுயநலத்திற்காக அதிக கவனம் செலுத்தி காலனித்துவவாதிகளுக்கு நல்ல அடிமைகளாக மாறி னர். இந்த செயல்பாட்டில், அவர்களில் சிலர் தங்கள் மதத்தை மாற்றி, முக்கியமான தமிழனத்தின் கலாசாரம் மற்றும் பண்புகளை மறந்தார்கள். தமிழ் தலைவர்கள் தமிழர்களின் அரசியல் இறையாண்மையைக் காக்கத் தவறிவிட்டனர். மற்றும் சிங்கள இனப்படுகொலை யிலிருந்து தங்கள் மக்களைப் பாதுகாக்கத் தவறி விட்டனர்.

சீன ஆக்கிரமிப்பாளர்களுடன் அதே காலனித்துவ மனநிலையை தமிழர்கள் மீண்டும் செய்யக்கூடாது. அவர்கள் அவ்வாறு செய்தால், வரலாறு இந்த ஒத்துழைப்பாளர்களையும் செயலற்ற பார்வையா ளர்களையும் தமிழர்களின் அழிவுக்கான காரணவாளி கள் என சரித்திரம் எழுதும் எனவும் பைடனுக்கான தமிழர்கள் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# வெள்ளத்தினால் கர்ப்பவதி மனைவியை தூக்கிக்கொண்டு 11 கி.மீ. நடந்த கணவன்

கொழும்பு, ஜூன் 15

நாட்டில் கடந்தவாரம் கடும் மழையுடன்கூடிய சீரற்ற காலநிலை நிலவியது. பல இடங்கள், வீதிகள் வெள்ளத்தில் மூழ்கின. காலி மாவட்டமும் கடுமை யாகப் பாதிக்கப்பட்டது.

காலி, இனிதும பகுதியில் உள்ள கர்ப்பவதி பெண் ணொருவருக்கு சிகிச்சைக்காக வைத்தியசாலை செல்ல வேண்டியிருந்தது. வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியதால் அம்புலன்ஸ்கூட வரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் தனது கர்ப்பிணி மனைவியை தூக்கிக் கொண்டு 11 கி.மீ. நடந்தே சென்றுள்ளார் கணவன் குமார.

# பொருளாதார மத்திய நிலையங்கள் மொத்த விற்பனைக்காகத் திறப்பு

கொழும்பு, ஜூன் 15

நாட்டிலுள்ள அனைத்து பொருளாதார மத்திய நிலையங்கள் மற்றும் பேலியகொடை மெனிங் சந்தை என்பவற்றை ஜூன் 17 மற்றும் 18ஆம் திகதிகளில் திறப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள் ளன.

எவ்வாறாயினும், குறித்த தினங்களில் மொத்த விற் பனை நடவடிக்கைகள் மாத்திரமே இடம்பெறும் என இராஜாங்க அமைச்சர் ஷசீந்திர ராஜபக்ஷ தெரிவித்தார்.

# 7.1 கோடி ரூபாய் பெறுமதியான 277.5 கிலோ கஞ்சாவுடன் பருத்தித்துறையில் மூவர் கைது!





யாழ்ப்பாணம், ஜூன் 15

பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து சுமார் 7 கோடி 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான 237.5 கிலோ கஞ்சாவுடன் 03 பேர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கஞ்சா கடத்திவரப்பட்ட மீன்பிடிப் படகு ஒன்றும் கடற்படையினரால் கைப்பற்றப்பட் டுள்ளது.

பருத்தித்துறை கடற்பரப்பில் கடற்படையி னர் நேற்று காலை மேற்கொண்ட விசேட நடவடிக்கையின்போது சந்தேகத்துக்கிடமான படகொன்றை சோதனையிட்டனர். இதன் போது படகில் இரண்டு சாக்குகளில் மறைத் துப் பொதி செய்யப்பட்டிருந்த கஞ்சா மீட் கப்பட்டது.

இந்நிலையில் சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் கடலில் வீசப்பட்ட மேலும் 6 பொதிகளடங் கிய கஞ்சா மீட்கப்பட்டது.

சர்வதேச கடற்பரப்புக்கு எடுத்துச் சென்று வேறொரு கப்பலுக்குக் கைமாற்றும் வகையில் படகில் இந்தக் கஞ்சா பொதிகள் எடுத்து வரப்பட்டன என சந்தேகிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் பருத் தித்துறை மற்றும் அச்சுவேலி பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். விசாரணைகளின் பின்னர் இவர்கள் காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

(அ-2-3)

# நாடு திரும்பிய 32 பேர் உட்பட மேலும் 2,361 பேருக்கு தொற்று

கொழும்பு, ஜூன் 15

வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பிய 32 பேர் உட் பட இலங்கையில் மேலும் 2,361 பேருக்கு நேற்றைய தினம் தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இவ்விடயம் குறிப்பிடப்பட் டுள்ளது.

இலங்கையில் நேற்று முன் தினம் மேலும் 2,361 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட் டுள்ளது.

இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டவர்களில் வெளி நாடுகளில் இருந்து நாடு திரும்பிய நிலையில் தனி மைப்படுத்தப்பட்டுள்ள இலங்கையர்களில் மேலும் 32 பேரும் புதுவருட கொத் தணியில் தொடர்புபட்டு 2,329 பேரும் தொற்றாளர்க ளாக அடையாளம் காணப் பட்டுள்ளனர்.

இதேவேளை நேற்று முன்



தினம் 2,031 பேர் கொரோனா தொற்றில் இருந்து குணம டைந்து வெளியேறியமையை அடுத்து இதுவரை குண மடைந்தவர்களது மொத்த எண்ணிக்கை 188,547 ஆக உயர்ந்துள்ளது.

புதிய கொவிட்-19 உயிரிழப்புகள் குறித்த தகவல் இதுவரை வெளியாகாத நிலையில் இதுவரை உயிரி ழந்தவர்களது எண்ணிக்கை 2,136 ஆக உள்ளது.

இதையடுத்து கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் தற்போது சிகிச்சை பெற்று வருபவர்களது எண் ணிக்கை 32,955 ஆக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

திருச்சி சிறப்பு முகாமில் தொடரும் போராட்டம்

# செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தமிழக முதலமைச்சருக்கு கடிதம்!

மன்னார், ஜூன் 15

முகாம்களில் வாழும் தமிழ் மக்களின் நலன்களை கருத்தில் கொண்டும், திருச்சி சிறப்பு சிறைச்சாலையில் தங்களது விடுதலை தொடர்பாக சாகும் வரை உண்ணாவிரதம் மேற் கொள்ளும் சிறைக்கைதிகளின் விடுதலை குறித்தும் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் செல்வம் அடைக்கல நாதன் தமிழ்நாடு முதலமைச் சர் மு.க.ஸ்டாலினுக்கு நேற்று திங்கட்கிழமை அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள் ளார்.

-அந்த கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில்-

இலங்கை வாழ் தமிழ் மக் கள் அயல் நாடாம் இந்திய தாய் திரு நாட்டில் அடைக் கலம் புகுந்த வேளையில் இது வரை காலமும் ஆற்றி வந்த



அளப்பரிய நன்மைகளை நன்றி யுடன் நினைவு கூறுகின்றேன்.

மேலும் கொரோனா தொற்றை கருத்தில் கொண்டு முகாம்களில் வாழும் இலங்கை வாழ் தமிழ் மக்களின் சிரமங் களையும் கஷ்டங்களையும் தங்களது மேலான கவனத்திற்கு கொண்டு வந்து அதற்கான தீர்க் கமான - சாத்தியமான முடிவு களை எடுக்குமாறு தங்களை வேண்டி நிற்கின்றேன்.

அத்தோடு இந்த குடும்பங் களின் ஒரு சில குடும்ப தலைவர் கள் திருச்சி சிறப்பு சிறைச்சாலை யில் வாடிக்கொண்டிருக்கி றார்கள்.

இவர்கள் தங்களது குடும்ப அங்கத்தவர்களுடன் இணைந்து தங்கள் வாழ்க்கையினை முன் னெடுக்க எதிர்பார்த்துள்ளனர்.

முகாம்களில் வாழும் தமிழ் மக்களின் நலன்களை கருத்தில் கொண்டும், திருச்சி சிறப்பு சிறைச்சாலையில் தங்களது விடுதலை தொடர்பாக சாகும் வரை உண்ணாவிரதம் மேற் கொள்ளும் சிறைக்கைதிகளின் விடுதலை தொடர்பாகவும் இவர்களுடைய மன ஆதங் கத்தை கருத்தில் கொண்டு இவர்களுடைய விடுதலைக்காக வும் மேலான நடவடிக்கை களை எடுப்பீர்கள் எனவும் நான் நம்புகிறேன் - என குறிப்பிடப் பட்டுள்ளது. (அ)



# உயர்நீதிமன்ற நீதியரசராக ஒபேசேகர ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்பு

கொழும்பு, ஜூன் 15

உயர் நீதிமன்றத்தின் நீதியர சராக நியமிக்கப்பட்ட அர்ஜுன ஒபேசேகர ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ முன்னிலை யில் பதவியேற்றார்.

மேலும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராக கே.பி.பெர்னாண்டோவும் மேன் முறையீட்டு நீதி மன்றத்தின் நீதியரசராக சசி மகேந்திரனும் ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்றுக்கொண்டனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்வைத்த முன் மொழிவுக்கு பாராளுமன்ற சபை கடந்த 9 ஆம் திகதி அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொலிஸார் நால்வருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், ஜூன்15

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸார் நால்வருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலையத்தில் பணி யாற்றும் பொலிஸார் இருவ ருக்கு காய்ச்சல் உட்பட்ட கொரோனா அறிகுறிகள் காணப்பட்ட நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் தனி மைப்படுத்தலுக்கு உட்படுத்தப் பட்டனர்.

அவர்களின் மேற்கொள்ளப் பட்ட பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகள் நேற்று முன் தினம் வெளியாகியிருந்தன. இந்நிலை யில் இருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து நேற்று காலை பொலிஸ் நிலையத்தி லும் அதற்கு நெருக்கமாக உள்ள சிலருக்கும் அன்ரிஜென் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இதன்போது பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த மேலும் இரண்டு பொலிஸார் மற்றும் பொலிஸ் நிலையத்துக்கு அரு கில் தேநீர்ச் சாலை நடத்தும் ஒருவருக்கும் தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலைய வட்டாரங் கள் தெரிவித்தன. (அ-2)

# 68 கொரோனா தொற்றாளர்கள் மட்டக்களப்பில் அடையாளம்

மட்டக்களப்பு, ஜூன் 15

மட்டக்களப்பு மாவட்டத் தில் கடந்த 24மணித்தியாலத் தில் 68 கொரோனா தொற்றா ளர்கள் இனங்காணப்பட்டுள்ள ரென மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் நா. மயூரன் தெரிவித்தார்.

நேற்று காலை மட்டக் களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவ லகத்தில் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்-

மட்டக்களப்பு மாவட்டத் தில் 24மணி நேரத்தில் 68 கொவிட் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். ஏறாவூர் சுகாதார பிரிவில் 16பேரும், செங்கலடி சுகாதார பிரிவில் 15பேரும், ஆரையம் பதி சுகாதார பிரிவில் 11பேரும் பட்டிப்பளை சுகாதார பிரிவில் 08பேரும், காத்தான்குடி சுகா தார பிரிவில் 05பேரும்களு வாஞ்சிகுடி பகுதியில் 04 பேரும், ஒட்டமாவடி சுகாதார பிரிவில் 03 பேரும்,மட்டக் களப்பு சுகாதார பிரிவில் இரண்டு பேரும் இனங்காணப் பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத் தில் இதுவரையில் 3,935 பேர் கோவிட் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். அத் துடன்57பேர்மரணமடைந்துள் ளனர்.மூன்றாவது அலை கார ணமாக 2952பேர் தொற்றாளர் களாக அடையாளம் காணப் பட்டுள்ளதுடன் 48பேர் மரணமடைந்தனர்.

கடந்த ஏழு தினங்களில் 693 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

கடந்த 06 தினங்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கொவிட் தடுப்பூசி ஏற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட் டுள்ளது. இதுவரை 19,959 பேருக்கு தடுப்பூசி வழங்கப் பட்டுள்ளது. தடுப்பூசி வழங் கப்படுவர்கள் ஆபத்து அதிக முள்ள பகுதிகளில் உள்ள 60வயதுக்கு அதிகமானவர்கள், ஆபத்து நிலை அதிகமுள்ள கர்ப்பவதி பெண்கள், வயோ திப மடத்தில் உள்ளவர்கள், ஆபத்து அதிகமுள்ள பகுதி களில் உள்ள தடகள உத்தியோ கத்தர்கள், ஆடைத் தொழிற் சாலையில் கடமையாற்றுபவர் கள் போன்றவர்களுக்கு தடுப்பூசி வழங்கப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத் தில் கோவிட் தடுப்பு நடவடிக் கைகளில் மக்களின் ஒத்து ழைப்பு மிகவும் குறைந்தள விலேயே வழங்கப்படுகின்றது. பயணத்தடை அமுல் உள்ள போதிலும் மக்களின் நடமாட் டம் மிகவும் அதிகளவிலேயே காணப்படுகின்றது.

கோவிட் தொற்றைக் கட் டுப்பாட்டின் கீழ் பயணக் கட் டுப்பாட்டை பயன்படுத்தி வீட் டில் இருப்பதன் மூலமே தொற் றின் அதிகரிப்பினை குறைக்க முடியும் - என்றார்.

# மாமரத்தில் இருந்து விழுந்து குடும்பஸ்தர் பரிதாப மரணம்

முல்லைத்தீவு, ஜூன் 15

முல்லைத்தீவு மாவட்டத் தின் புதுக்குடியிருப்பு பிரதேசத் துக்குட்பட்ட உடையார்கட்டு, இருட்டு மடு கிராமத்தில் மாம ரத்தில் மாங்காய் பறிக்க ஏறிய குடும்பஸ்தர் தவறுதலாக கீழே விழுந்து உயிரிழந்தார்.

வெள்ளையன் சண்முகநாதன் (வயது 51) எனும் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவரது சடலம் முல்லைத் தீவு மாவட்ட வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப் பட்டு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டது.

பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் சட லம் ஒப்படைக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் புதுக் குடியிருப்பு பொலிஸார் விசார ணைகளை முன்னெடுத்தனர்.(இ)

# பயண தடை மேலும் நீடிக்கப்பட வாய்ப்பு



கொழும்பு, ஜூன் 15

நாட்டில் அமுல்படுத்தப்பட் டுள்ள பயணக்கட்டுப்பாடு களை மேலும் சில காலத்திற்கு நீடிக்க வாய்ப்புள்ளதாக இரா ஜாங்க அமைச்சர் சன்ன ஜய சுமண தெரிவித்துள்ளார்.

எவ்வாறிருப்பினும் விசேட வைத்திய நிபுணர்களின் தீர்மா னங்களுக்கு அமையவே பய ணக் கட்டுப்பாடுகளை தொடர்வதா, இல்லையா என் பது குறித்து தீர்மானிக்கப்படும் எனவும் அவர் மேலும் கூறியுள் ளார்.

பயணக்கட்டுப்பாடு காரண மாக கொரோனா மரணங்க ளும் நோயாளர்களின் எண்ணிக் கையும் குறைவடைந்துள்ளதை அவதானிக்க முடிந்தாலும் குறித்த எண்ணிக்கையில் பாரிய மாற்றமொன்று ஏற்படவில்லை எனவும் அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த நிலையில், பயணக் கட்டுப்பாட்டை மேலும் சில நாட்களுக்கு நீடிப்பது என்ற தீர்மானமே தற்போதைக்கு இருப்பதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.



# நீரில் மூழ்கி 2 இளைஞர்கள் பலி!

மட்டக்களப்பு, ஜூன் 15

மட்டக்களப்பு, ஏறாவூர் பகுதியில் நீரில் மூழ்கி இரு இளைஞர்கள் பலியாகினர் என்று பொலிஸார் தெரி வித்தனர்.

எட்டு இளைஞர்கள் நீராடு வதற்கு சென்றுள்ளனர். இதில் 15 மற்றும் 17 வயதுகளுடைய இரு இளைஞர்களே நீரில் மூழ்கி பலியாகினர்.

சடலங்கள் செங்கலடி வைத் தியசாலையில் வைக்கப்பட் டுள்ளன. மேலதிக பொலிஸ் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# கோழி கொண்டு செல்லும் போர்வையில் கஞ்சா கடத்திய சந்தேகநபர் கைதானார்

கொழும்பு, ஜூன் 15

பயணத்தடையை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு அத்தியாவசிய சேவை வழங்குவதாக தெரிவித்து, லொறியொன்றில் கஞ்சாவை கடத்திச் சென்ற நபரை கல்கமுவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபரான லொறியின் சாரதி 56 வயதான ஒருவரென பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 1,100 கிலோகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த சந்தேகநபர் மன்னார் பகுதியிலிருந்து கோழி மற்றும் முட்டைகளை கொண்டு செல்வதாகத் தெரிவித்து அத்தியாவசிய சேவை உரிமத்தை பெற்றுள்ளமை விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

# விவசாய திணைக்கள உத்தியோகத்தர் கைது

கொழும்பு, ஜூன் 15

விவசாய திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவரை நேற்று முன் தினம் வாரியபொல பொலிஸார் கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்ட 50 உர மூடைகளை தமது சொந்த வியாபார நிலையத்துக்கு எடுத்துச் சென்று குறைந்த விலையில் விற்பனை செய்ததாக கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டையடுத்தே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# இலங்கையர்களுக்கு தற்காலிக தடை விதித்த பஹ்ரைன் அரசு

கொழும்பு, ஜூன் 15

இலங்கை உள்ளிட்ட சில நாட்டவர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளுக்கான அனுமதி பத்திரத்தை விநியோகிக்கும் செயல்பாட்டை பஹ்ரைன் அரசாங்கம் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.

கொவிட் வைரஸ் தொற்று காரணமாக சிவப்பு பட்டியலில் உள்ள நாடுகளுக்கு இவ்வாறு அனுமதிப் பத்திரம் வழங்கும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்கு இவ்வாறு அனுமதிப் பத்திரம் வழங்கும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

# அடுத்த சில நாட்களில் தொற்று அதிகரிக்கலாம்

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை



**கொழும்பு, ஜூன் 15**

**இந்தியாவுடன் ஒப்பிடும்போது இலங்கையில் நாளாந்த கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாக சுகாதார அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் இவ்வாறு கூறினார்.

அடுத்த சில நாட்களிலும் நாட்டில் கொரோனா தொற்று உறுதியாகும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

பயணக் கட்டுப்பாடுகள் மட்டுமல்லாமல், சுகாதார அமைச்சினால் பிறப்பிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு இணங்க மக்களின் நடத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த முடியும் என ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

# சில மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை!

கொழும்பு, ஜூன் 15

நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக சில மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

அதன்படி, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தின் குருவிட்ட, கிரியெல்ல, அயகம பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல கேகாலை மாவட்டத்தின் தெரணியகல, வரக்காபொல, தெஹியோவிட்ட மற்றும் புளத்கொஹூபிட்டிய, அரநாயக்க, கேகாலை, யட்டியந்தோட்டை, ருவன்வெல்ல, மாவனல்லை பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# கொரோனா மரண விவரங்களை வெளியிடும் முறையில் மாற்றம்

கொழும்பு, ஜூன் 15

இனிவரும் காலங்களில், கொரோனா வைரஸ் தொற்றால் ஏற்படும் மரணங்கள் தொடர்பான விவரங்களை 48 அல்லது 24 மணித்தியாலங்களுக்குள் வெளியிட எதிர்பார்ப்பதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

பெரும்பாலும் கொரோனா மரணங்கள் தொடர்பான விவரங்களையும் அதே நாளில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, முந்தைய நாட்களில் ஏற்பட்ட மரணங்கள் தொடர்பான விவரங்களை காலம் தாழ்த்தி வெளியிடப்படும் நடவடிக்கை நிறுத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

# பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசி; பிரதமர் மஹிந்த தலைமையில் ஆராய்வு

கொழும்பு, ஜூன் 15

கோவிட்-19 தொற்று காரணமாக மூடப்பட்டுள்ள பாடசாலைகளை மீண்டும் திறக்கும்போது பிள்ளைகளின் நோய்கள் மற்றும் பிரச்னைகளை கண்டறிய குழந்தை மருத்துவர்களின் உதவியை பெறுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ,கல்வி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

பாடசாலைகளை மீள ஆரம்பித்தல் மற்றும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு கோவிட் நோய் எதிர்ப்பு தடுப்பூசிகளை வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தி அலரி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கொவிட் தொற்று நிலைமை கட்டுப்படுத்தப்பட்ட பின்னர் உடனடியாக கட்டம் கட்டமாக பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதன் முக்கியத்துவம் குறித்து சுட்டிக்காட்டிய பிரதமர், ஆசிரியர்களுக்கான தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையை சுகாதார அமைச்சின் ஊடாக நிறைவேற்றிக் கொள்ள முடியும் என குறிப்பிட்டார்.

குறித்த கலந்துரையாடலில் கலந்துகொண்ட குழந்தை மருத்துவர்களின் சங்கத்தின் பிரதிநிதிகள் பாடசாலைகளை மீள திறக்கும்போது ஏற்படக்கூடிய பிரச்னைகளை தவிர்ப்பதற்கு தமது சங்கத்தின் ஆதரவை கல்வி வலய மட்டத்தில் பெற்றுக்கொடுக்க முடியும் என பிரதமர் முன்னிலையில் தெரிவிக்கப்பட்டது.

அதற்கமைய நாடு முழுவதும் உள்ள 99 கல்வி வலயங்களுக்கும் தமது சங்கத்தின் சார்பில் பிரதிநிதிகளை பெயரிட்டு மேற்படி நடவடிக்கையை முறையாக முன்னெடுப்பதாக சங்கத்தின் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான தடுப்பூசி திட்டமொன்று செயற்படுத்தப்படின் அதன்போது தரம் 11 மற்றும் தரம் 13 மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

இப்பணியை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு சுமார் இரண்டு இலட்சத்து எழுபத்து ஒன்பது ஆயிரம் ஆசிரியர்கள் மற்றும் சுமார் மூன்று இலட்சம் கல்விசாரா ஊழியர்கள் உள்ளிட்டோருக்கு தடுப்பூசி வழங்குவதன் முக்கியத்துவமும் பேராசிரியர் கபில பெரேராவால் சுட்டிக்காட்டப்பட்டது.

நாட்டின் எதிர்கால சந்ததியினர் மற்றும் அவர்களை வழிகாட்டும் ஆசிரியர்களை பாதுகாப்பதற்கு அரசாங்கம் எப்போதும் நடவடிக்கை மேற்கொள்ளும் என பிரதமர் இதன்போது நம்பிக்கை தெரிவித்தார்.

பாடசாலை ஆரம்பிக்கும்போது மாணவர்களும் ஆசிரியர்களும் பாதுகாப்பான முறையில் பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படுவது தொடர்பான வேலைத்திட்டமொன்றை செயல்படுத்த வேண்டும் என்று தெரிவித்த பிரதமர், பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து நடவடிக்கையின் போது பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறும் கேட்டுக்கொண்டார்.

குறித்த கலந்துரையாடலில் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், பிரதமரின் செயலாளர் காமினி செனரத், கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா, பாடசாலை நடவடிக்கைகளுக்கான மேலதிக செயலாளர் எல்.எம்.டீ.தர்மசேன, பாடசாலை சுகாதாரப் பிரிவின் பணிப்பாளர் கமனி குணரத்ன, வைத்தியர்களான டி.எல்.பீ.சோமதுங்க, மகேந்திர ஆர்னல்ட், ஷாமன் ரஜீந்திரஜித், சுரந்த பெரேரா, பேராசிரியர் சனத் லமாபதுசூரிய உள்ளிட்ட குழந்தை மருத்துவ சங்கத்தின் மருத்துவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண் டனர்.




# சுகாதார வழிகாட்டலை மீறி வவுனியாவில் திருமணம்!

## மணமக்கள் உட்பட பலர் தனிமைப்படுத்தல்

வவுனியா, ஜூன் 15

வவுனியா-தவசிகுளம் பகுதியில் சுகாதார நடைமுறைகளை மீறி திருமண நிகழ்வு இடம்பெற்றமையினால் மணமக்கள் உட்பட அவர்களின் வீட்டார் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

வவுனியா தவசிகுளம் கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட பாலவிநாயகர் 3 ஆம் ஒழுங்கை வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற திருமண நிகழ்வு ஒன்றை 15 உறவினர்கள் மாத்திரம் பங்கேற்று நடத்துமாறு தெரிவித்து சுகாதார பிரிவினர் அனுமதி வழங்கியிருந்தனர்.

எனினும், குறித்த திருமண நிகழ்வில் 100 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர் எனவும் சுகாதார நடைமுறைகள் மீறப்பட்டுள்ளதாகவும் சுகாதாரப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்து நேற்று முன்தினம் மதியம் குறித்த திருமண வீட்டுக்கு சென்ற சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை வழங்கியிருந்தனர்.

எனினும், தொடர்ச்சியாக சுகாதார நடைமுறையை மீறி செயல்பட்ட மணமக்கள் உட்பட அவரின் வீட்டார் நேற்று முன் தினம் மாலை சுகாதார பிரிவினரினால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

மேலும் திருமண நிகழ்வின் புகைப்படம் பிடிப்பாளரின் உதவியுடன் திருமண நிகழ்வில் கலந்து கொண்டவர்களை அடையாளம் கண்டு அவர்களையும் சுயதனிமைப்படுத்தல் மேற்கொள்வதற்குறிய நடவடிக்கையும் சுகாதார பிரிவினர் மேற்கொண்டுள்ளனர்.

குறித்த திருமண நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# ரணிலின் 'மீள்வருகை' அரசியலில் புதிய திருப்பத்தை ஏற்படுத்துமா?

அகிலன்

வேகமாகப் பரவும் கொரோனாவின் பீதியில் இலங்கை மூழ்கிக் கிடக்க, உள்நாட்டு அரசியலிலும் அதிரடியான சில நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. அதில் முக்கியமானதுதான் ரணில் விக்கிரமசிங்கவின் மீள்வருகை. எதிர்வரும் 22 ஆம் திகதி அவர் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றுக் கொள்வார் என்ற செய்தி, கொழும்பு அரசியலை பரபரப்பாக்கியிருப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன.

ரணிலின் மீள்வருகையை தமக்குச் சாதகமாக்கிக்கொள்வதற்கான வாய்ப்புக்களை அரசதரப்பு பயன்படுத்த முற்பட்டுள்ளது. மறுபுறம் பிரதான எதிர்க்கட்சியான சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி இதனால் பெரிதும் குழம்பிப்போயிருக்கின்றது. இந்தப் பின்னணியில் ரணில் விக்கிரமசிங்கவின் மீள் பாராளுமன்றப் பிரவேசம் அரசியலரங்கில் பரபரப்பாக எதிர்பார்க்கப்படுவதைப் போல புதிய திருப்பம் ஒன்றை ஏற்படுத்துமா என்பதை இந்த வாரம் ஆராய்வோம்.

கடந்த ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் நாட்டை நீண்டகாலம் ஆட்சி செய்த ஐக்கிய தேசியக் கட்சி படுதோல்வியடைந்தமை தெரிந்த செய்திதான். கட்சியில் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் ஏற்பட்ட தலைமைத்துவப் போட்டியும், சஜித் தனியாகப் பிரிந்துசென்று தேர்தலைச் சந்தித்தமையும்தான் ஐ.தே.க.வின் இந்தப் படுதோல்விக்குக் காரணம்.

**தேசியப்பட்டியல் எம்.பி.**

ரணிலின் தலைமையில் ஐ.தே.க. தொடர் தோல்வியைச் சந்தித்துவருவதால், புதிய தலைமை ஒன்று அவசியம் என்பதை உணர்ந்துகொண்ட பெரும்பாலான கட்சி உறுப்பினர்கள் சஜித்தின் தலைமையை விரும்பினார்கள். கட்சித் தலைமையை விட்டுக் கொடுக்க ரணில் தயாராக விருக்காததால், தனியாகச் செல்வதைவிட சஜித்துக்கு வேறு வழி இருக்கவில்லை. விளைவு - தேர்தல் முடிவில் சஜித் எதிர்க்கட்சித் தலைவரானார். ஐ.தே.க. ஓர் ஆசனத்தைக் கூட பெறவில்லை. ஆனால், விகிதாசாரத் தேர்தல் முறையின் அடிப்படையில் தேசியப் பட்டியல் மூலம் ஓர் ஆசனம் ஐ.தேக.வுக்கு கிடைத்தது.

அந்த ஒரு தேசியப்பட்டியல் ஆசனத்துக்குரியவரைத் தெரிவு செய்வதற்கு ஐ.தே.க.வுக்கு 10 மாதங்கள் சென்றிருக்கின்றது. பத்து மாத காலமாகத் தொடர்ந்த விவாதங்களையடுத்து இந்தத் தெரிவு இடம்பெற்றிருக்கின்றது. பொதுத் தேர்தலில் பலமான அடியை வாங்கிய ரணில் அப்போதைய நிலையில் பாராளுமன்றம் வருவதை விரும்பவில்லை. தனியொருவராக பாராளுமன்றம் வரும்போது தான் அவமானப்படுத்தப்படலாம் என்ற தயக்கம் அவருக்கு இருந்தது. அதேவேளையில், ஐ.தே.க.விலிருந்து மற்றொருவர் பாராளுமன்றம் வருவதையும் அவர் தந்திரமாகத தடுத்திருந்தார். தனக்கான நேரம் வரும்வரைக்கும் அவர் காத்திருந்தார்.

இப்போது கட்சியின் செயல் குழுவின் முடிவு என்ற பெயரில் அவர் பாராளுமன்றம் வருகின்றார். கட்சியின் செயல்குழு அவருடைய முழுஅளவிலான செல்வாக்கிற்கு உட்பட்டது. கொரோனா தொற்று, பொருளாதாரப் பிரச்னை என அரசாங்கம் மக்கள் மத்தியில் கடும் அதிருப்தியைச் சந்தித்திருக்கும் ஒரு பின்னணியில், 'ரணிலின் தேவை' உணரப்பட்டிருப்பதாகக் கூறியே அவர் இப்போது பாராளுமன்றம் வரவுள்ளார். அதேவேளையில், எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் சஜித் பிரேமதாச ஆக்கபூர்வமாகச் செயல்படாமையும், பாராளுமன்றம் வருவதற்கு ரணில் திட்டமிட்டமைக்கு ஒரு காரணியாகச் சொல்லப்படுகின்றது.

**சஜித் அணியின் குழப்பம்**

ரணில் மீண்டும் பாராளுமன்றம் வரும்போது தனியாக வருவதற்கு விரும்பவில்லை என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் சொல்கின்றன. கட்சியின் தனி ஒருவராக வந்திருப்பதற்கு அவர் விரும்பவில்லை. அதனால், சஜித் அணியிலுள்ள சிலரையாவது தனது பக்கத்துக்கு இழுத்துக்கொள்வதற்கான பேரங்கள் இடம்பெறுகின்றன என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் சொல்கின்றன. அதனைவிட, ஆளும் கட்சியிலுள்ள அதிருப்தியாளர்கள் சிலரை தமது பக்கத்துக்கு இழுத்துக்கொள்வதற்கான முயற்சிகளையும் ரணில் மேற்கொண்டிருக்கிறார் என்று தெரிகின்றது. இதன் மூலம் எதிர்க்கட்சித் தலைமைப் பதவியை அவர் இலக்கு வைப்பதாகச் சொல்லப்படுகின்றது.

ஆளும் கட்சி எம்.பி.கள் சிலரும் இது தொடர்பாக கடந்த வாரம் பாராளுமன்றத்திலேயே பிரஸ்தாபித்திருக்கின்றார்கள். இதனை வெறுமனே ஒரு அரசியல் நோக்கத்துடனான பேச்சு எனக் கடந்து சென்றுவிட முடியவில்லை. காரணம் இலங்கையைப் பொறுத்தவரையில் அரசியலில் எதுவும் நடக்கலாம். 2015 இல் இருக்கும் இடமே தெரியாதிருந்த மைத்திரிபால சிறிசேன திடீரென பொதுவேட்பாளராக நிறுத்தப்பட்டு ஜனாதிபதியாக்கப்பட்டார். அதனால், ரணிலின் தற்போதைய நகர்வுகளின் பின்னணி என்ன என்பதை உறுதியாகச் சொல்லக்கூடிய நிலை இல்லை!

அதேவேளையில் சஜித் அணியும் இந்த நகர்வுகளால் குழப்பமடைந்திருக்கின்றது. கடந்த வாரம் அவசரமாகக் கூடிய சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, சஜித் பிரேமதாஸதான் எதிர்க்கட்சித் தலைவர் என நம்பிக்கைத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. இவ்வாறான தீர்மானம் ஒன்றை அவசரமாக நிறைவேற்ற வேண்டிய அவசரம் எதற்காக சஜித் அணிக்கு ஏற்பட்டது என்ற கேள்விக்குப் பதிலில்லை.



**அரசியலில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் பின்னர் 'நரி' என வர்ணிக்கப்படும் ரணில் விக்கிரமசிங்கவின் மீள்வருகை இலங்கை அரசியலரங்கில் சலசலப்பை ஏற்படுத்தியிருந்தாலும், முக்கியமான அரசியல் மாற்றம் ஒன்றை அவரால் ஏற்படுத்த முடியுமா? என்ற கேள்வி எழுகின்றது. ராஜபக்ஷக்கள் இலங்கை அரசியலில் அசைக்க முடியாத சக்திகளாக இருப்பதும் இதற்குக் காரணம்.**

அதேவேளையில், ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 22 ஆம் திகதி பாராளுமன்றம் வருவார் என அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில், அதற்கு முதல்நாள் அதாவது 21 ஆம் திகதி ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்றக் குழு அவசரமாகக்கூடுகின்றது. தமது அணியிருந்து யாரும் ரணிலுடன் இணைந்துகொள் வதைத் தடுப்பதற்கான ஒரு முயற்சிதான் இது. ஆக, ரணிலின் மீள்வருகை சஜித் முகாமில் பதற்றத்தை ஏற்படுத்தியிருப்பது தெளிவாகத் தெரிகின்றது.

**ரணில் செய்யப்போவது என்ன?**

அரசியலில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் பின்னர் 'நரி' என வர்ணிக்கப்படும் ரணில் விக்கிரமசிங்கவின் மீள்வருகை இலங்கை அரசியலரங்கில் சலசலப்பை ஏற்படுத்தியிருந்தாலும், முக்கியமான அரசியல் மாற்றம் ஒன்று ஏற்படுமா என்ற கேள்வி எழுகின்றது. ராஜபக்ஷக்கள் இன்று இலங்கை அரசியலில் அசைக்கமுடியாத சக்திகளாக இருப்பதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

யுத்த வெற்றிக்கு அவர்கள் தான் காரணம் என சிங்கள மக்கள் நம்புவது முதலாவது காரணம். ராஜபக்ஷக்களும் அதனை அடிக்கடி சிங்கள மக்களுக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கின்றார்கள். இரண்டாவது, சிங்கள - பௌத்த தேசியவாதத்தை அவர்கள் தமது கொள்கையாகக் கொண்டிருக்கின்றார்கள். ரணில் விக்கிரமசிங்கவை 2009க்குப் பின்னர் ராஜபக்ஷக்கள் தொடர்ச்சியாகத் தோற்கடிக்கக்கூடியதாக இருந்தமைக்கு இவைதான் காரணம்.

இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்ட ஒருவராகத் தான் சஜித் பிரேமதாஸ, தன்னுடைய போக்கை மாற்றிக் கொண்டார். தன்னையும் ஒரு சிங்கள - பௌத்த தேசியவாதியாக அவர் காட்டிக்கொள்ள முற்பட்டிருப்பதை காணமுடிகின்றது. இதன் மூலம் உள்நாட்டில் தன்னுடைய செல்வாக்கை அதிகரித்துக் கொள்ளலாம் என்ற உபாயத்துடன் சஜித் செயல்பட்டாலும், அதில் அவரால் முழு அளவில் வெற்றிபெற முடியவில்லை. ராஜபக்ஷக்களின் இடத்தை அவரால் எட்ட முடியவில்லை.

அதேவேளையில் சர்வதேச அரங்கிலும் பலவீனமான ஒருவராகவே சஜித் உள்ளார். ரணிலைப் பொறுத்தவரையில் தன்னை ஒரு சிங்கள - பௌத்த தேசியவாதியாக அவர் தன்னை ஒருபோதும் வெளிப்படுத்தியதில்லை. மறுபுறத்தில் சர்வதேச அரங்கில் மிகவும் செல்வாக்கான ஒருவராக அவர் உள்ளார். இலங்கையில் மீண்டும் ஓர் ஆட்சிமாற்றத்தை சர்வதேசம் விரும்புகின்றது என்பது இரகசியமானதல்ல. அண்மையில் கனடாவின் ஒன்ராறியோ மாநிலத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், அமெரிக்க காங்கிரஸில் கொண்டுவரப்பட்டுள்ள பிரேரணை, ஐரோப்பிய ஒன்றியம் நிறைவேற்றிய தீர்மானம் என்பன இதனைத்தான் பிரதிபலிக்கின்றன.

தமது தேவைகளுக்கு ஏற்றவாறு செயல்படக்கூடிய ஒரு தலைவர் நாட்டில் இல்லை என்பது மேற்கு நாடுகளுக்கு ஒரு குறைபாடாகவே இருக்கின்றது. சஜித்தின் போக்கும் அவரது தலைமைத்துவக் குறைபாடுகளும் மேற்கு நாடுகளின் தேவைக்கு ஏற்றதாக இல்லை. ஆனால், மேற்கு நாடுகளைப் பொறுத்தவரையில் ரணிலை அவர்கள் விரும்புவதற்கு சில காரணங்கள் உள்ளன. ஆனால், களத்தில் செல்வாக்கில்லாத ஒருவரால் எப்படி அரசியல் மாற்றம் ஒன்றை ஏற்படுத்த முடியும்?



# ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானம்; நெருக்கடியிலிருந்து மீள்வது எப்படி?

**பவித்திரன்**

கடன் சுமையில் சிக்கித் தவிக்கும் இலங்கை ஐரோப்பிய சந்தைக்கான வரிச் சலுகை மற்றும் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராட அளிக்கப்படும் உதவி ஆகியவற்றை இழக்கும் அபாயத்தை எதிர்நோக்குகிறது.

இலங்கை மீது கடுமையான நடவடிக்கைகளை எடுக்க ஐரோப்பிய பாராளுமன்றம் பரிந்துரை செய்துள்ளது.

இலங்கையில் ராஜபக்ஷ அரசாங்கம் அதற்கு முந்தைய ஆட்சி கொடுத்த வாக்குறுதிகளில் இருந்து பின்வாங்கியதும் அங்கு தொடர்ச்சியாக சீரழிந்து வரும் மனித உரிமைகளின் பின்னணியிலும் ஐரோப்பிய பாராளுமன்றம் இந்த தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு இலங்கை ஏற்றுமதி ஆயத்த ஆடைகளுக்கான ஜி.எஸ்.பி. வரிச் சலுகையை ஐரோப்பிய ஆணையம் இடைநிறுத்த வேண்டும் என்று இந்த தீர்மானத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இறக்குமதி வரிகள் நீக்கப்படுவதன் மூலம் ஐரோப்பிய நாடுகளின் சந்தையைச் சுலபமாக அணுக முடியும்.

ஜி.எஸ்.பி. சலுகையைப் பெற சில நிபந்தனைகள் உள்ளன. ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தக கொள்கையின் அடிப்படையில், இந்தச் சலுகையைக் கோரிப் பெறுபவர்கள் "மனித உரிமைகள், தொழிலாளர் உரிமைகள், சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் நல்லாட்சி தொடர்பில் 27 சர்வதேச கடப்பாடுகளை நடைமுறைப்படுத்த வேண்டும்".

இலங்கையில் மனித உரிமைகள் மிகவும் சீரழிந்து வருகின்றன என்பதற்கு அப்பாற்பட்டு தாங்கள் இலங்கையில் , "சமூக செயற்பாட்டாளர்களுக்கான பொதுவெளி குறைந்து வருவது, தன்னிச்சையான கைதுகள், உரிய வழிமுறையின்றி தடுத்து வைக்கப்படுதல், சிறுபான்மையினர் இலக்கு வைக்கப்படுவது மற்றும் அரச நிர்வாகம் அதிகரித்த அளவில் இராணுவ மயமாக்கப்படுதல்" ஆகியவை குறித்தும் தாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாக ஐரோப்பிய நாடாளுமன்ற தீர்மானம் கூறுகிறது.

**வாக்குறுதியை இலங்கை மீறியது**

அந்த சிறப்பு அமர்வில் உரையாற்றிய சமத்துவத்திற்கான ஐரோப்பிய ஆணையர் ஹெலினா டாலி அம்மையார் கடந்த 2017ல் இலங்கை ஜி.எஸ்.பி. சலுகையை மீண்டும் கோரிய போது, சர்வதேச அளவுகோல்களுக்கமைய பயங்கரவாத தடைச் சட்டம் திருத்தப்படும் என்று இலங்கை உறுதியளித்துள்ளது என்று சுட்டிக்காட்டினார்.

மனித உரிமைகள் சட்டத்தரணி ஹெஜாஸ் ஹிஸ்புல்லா மற்றும் கவிஞர் அஹ்னாஃப் ஜஸீம் ஆகியோரின் விடுதலைக்காகவும் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்கள் குரல் கொடுத்துள்ளனர். அவர்கள் நியாயமற்ற முறையில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று கூறியுள்ள அவர்கள், சட்ட மா அதிபர் அந்தச் சட்டத்தின் அடிப்படையில் பிணைக்குத் தகுதியானவர்களுக்கு அது அளிக்கப்பட வேண்டும் என்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் அர்த்தபூர்வமான வகையில் தமது சட்டத்தரணிகள் மற்றும் குடும்பத்தாரை சந்திக்கவும், முன்னறிவிப்பின்றி இலங்கை மனித உரிமைகள் ஆணையம் அவர்களைச் சென்று சந்திக்க வழி ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

**நிதியுதவிகள் நிறுத்தப்படும்**

இலங்கையில் பயங்கரவாதத்திற்கு எதிரான செயல்பாடுகளில் உதவிவரும் ஐ.நாவின் போதைப் பொருட்கள் மற்றும் குற்றங்களைத் தடுக்கும் அலுவலகம் மற்றும் சர்வதேச பொலிஸ் அமைப்பான இண்டர்போல் ஆகியவற்றுக்கு அளிக்கப்படும் நிதியுதவிகளை மதிப்பீடு செய்ய வேண்டும் என்றும் ஐரோப்பிய பாராளுமன்ற தீர்மானம் கேட்டுள்ளது. பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை என்று கூறி இன மற்றும் மொழி சிறுபான்மையின குழுக்கள், சிவில் சமூகம், மனித உரிமை காப்பாளர்கள் ஆகியோர் துன்புறுத்தப்படுகின்றனர் என்றும் அந்த தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது

போர்க் குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் போன்றவற்றைச் செய்தவர்களை மீதான விசாரணை மற்றும் நீதியின் முன்னர் நிறுத்தும் செயல்பாட்டில் எவ்விதமான சர்வதேச தலையீட்டையும் நிராகரித்துள்ள தற்போதுள்ள இலங்கை அரசு மீது விரக்தியடைந்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் அதற்கான சட்ட நடவடிக்கையை நாட்டிற்கு வெளியே எடுக்க வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது.

எனினும், தனது சொந்த இராணுவத்தினர் மீது இலங்கை அரசே விசாரணை நடத்த வேண்டும் என்று ஐரோப்பிய நாடாளுமன்றம் கோரியுள்ளது.

நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படி, "கடுமையான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கு ஆளான பாதுகாப்புப் படையினர் மீதான விசாரணைகளுக்கு இலங்கை அரசு எவ்விதமான தடையையும் ஏற்படுத்தாமல் இருக்க வேண்டும் எனவும், தவறிழைத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் போர்க் காலத்தில் மனித உரிமைகள் மீறல்கள், போர்க் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான மூத்த அதிகாரிகள் உட்பட அனைத்து தரப்பினர் மீதும் விசாரணை நடத்தப்பட வேண்டும் மூத்த அரச பொறுப்புகளுக்கு குற்றச்சாட்டுக்கு ஆளான முன்னாள் இராணுவத் தளபதிகள் நியமிக்கப்படும் நடைமுறையை இலங்கை முடிவுக்கு கொண்டுவர வேண்டும்" என்று கோரப்பட்டுள்ளது.

தீவிரவாத எண்ணங்களிலிருந்து மீள்வதற்கான இலங்கை அரசின் திட்டத்தின் கீழ் சந்தேக நபர்கள் எவ்விதமான சட்ட வழிமுறைகளும் இன்றி இரண்டு ஆண்டுகள் வரை தடுத்து வைத்திருக்க முடியும். இத மனித உரிமை ஆர்வலர்கள் கண்டித்துள்ள நிலையில், ஐரோப்பிய நாடாளுமன்றமும் இது உடனடியாக இடைநிறுத்தப்பட வேண்டும் என்று கோரியுள்ளது.

**கடும் பாதிப்புகள்**

ஐரோப்பிய பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட இந்த தீர்மானங்கள் அந்த நாடாளுமன்றத்தில் உறுப்புரிமை கொண்ட நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படும். அவர்கள் அதன் மீதான உரிய நடவடிக்கையை எடுப்பார்கள்.

அந்த நாடுகள் ஜி.எஸ்.பி. சலுகைகளை நிறுத்துவது என்று முடிவு செய்தால், இலங்கையில் ஏற்றுமதி சந்தை மிகப்பெரிய அளவில் பாதிக்கப்படும். இலங்கையின் பெரிய வர்த்தகச் சந்தையாக ஐரோப்பிய ஒன்றியம் இருக்கும் நிலையில் அதன் ஏற்றுமதி - இறக்குமதி மிகவும் பாதிக்கப்படும். அதன் மூலம் இலங்கை கணிசமான அளவுக்கு அந்நியச் செலாவணியை இழக்க நேரிடும்.

ஆடை ஏற்றுமதியே இலங்கைக்கு அந்நிய செலாவணியை பெற்றுக் கொடுக்கும் துறையாகும். ஜி.எஸ்.பி. மூலம் இலங்கை வேலை வாய்ப்புகள், பொருளாதார அபிவிருத்தி, அந்நியச் செலாவணி போன்ற பல விஷயங்களில் நன்மையடைந்துள்ளது.

அந்தச் சலுகை இழக்கப்பட்டால், இலங்கை குறைந்தது 150 மில்லியன் டொலர்களை ஏற்றுமதி சந்தையில் இழக்க நேரிடும். ஜி.எஸ்.பி. இடைநிறுத்தப்பட்டாலோ அல்லது விலக்கிக் கொள்ளப்பட்டாலோ இலங்கைப் பொருட்களின் ஏற்றுமதி விலை கூடும், எனவே சர்வதேச சந்தையில் நிலவும் கடும் போட்டியில் போட்டியிட முடியாத சூழல் ஏற்படும்.

இந்தப் பின்னணியில்தான் இலங்கை அரசு இப்போது பதற்றமடைந்திருக்கின்றது. இந்த நிலைமைகளைச் சமாளிப்பதற்கான என்ன செய்வது என்பதையிட்டு அரசாங்கம் அவசரமாக ஆலோசனைகளை நடத்த முற்பட்டுள்ளது! என்ன செய்யப்போகின்றார்கள் என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்!

> "ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஜி.எஸ்.பி. சலுகைகளை நிறுத்துவது என்று முடிவு செய்தால், இலங்கையில் ஏற்றுமதி சந்தை மிகப்பெரிய அளவில் பாதிக்கப்படும். இலங்கையின் பெரிய வர்த்தகச் சந்தையாக ஐரோப்பிய ஒன்றியம் இருக்கும் நிலையில் அதன் ஏற்றுமதி - இறக்குமதி மிகவும் பாதிக்கப்படும். அதன் மூலம் இலங்கை கணிசமான அளவுக்கு அந்நியச் செலாவணியை இழக்க நேரிடும்.



# புலமைச் சிகரம்

## ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை - 5
வினாத்தாள் II

நேரம் - 45 நிமிடம்
ஆசிரியர் - சரத்பாபு

கல்வி tv CHANNEL

56. சூரியக் குடும்பத்தில் வளையமுள்ள கோள் எது?
1. வியாழன் 2. சனி 3. செவ்வாய் 4. புவி

57.




D எனும் எழுத்துக் குறிக்கும் ஆறு?
1. வளவகங்கை 2. நில்வளவை கங்கை
3. ஜின் கங்கை 4. மகாவலி கங்கை

58.



இக் கருவி எவ்வகை?
1. தோற்கருவி 2. கஞ்சக்கருவி
3. துளை கருவி 4. காற்றுக்கருவி

59. நான்கு வயர்த் துண்டுகளை மட்டும் பயன்படுத்தி ஒளிரும் மின்சுற்றைப் பூரணப்படுத்துக.



60. பின்வரும் இசைக்கருவிகளில் இழையக் கருவியாக விளங்குவது
1. மத்தளம் 2. வீணை 3. புல்லாங்குழல் 4. தாளம்

* * *

### இல - 5 வினாத்தாள் - I விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. 2 | 11. 3 | 21. 3 | 31. 3 |
| 2. 1 | 12. 2 | 22. 2 | 32. 1 |
| 3. 1 | 13. 3 | 23. 3 | 33. 1 |
| 4. 3 | 14. 2 | 24. 2 | 34. 2 |
| 5. 2 | 15. 3 | 25. 3 | 35. 3 |
| 6. 3 | 16. 2 | 26. 3 | 36. 3 |
| 7. 2 | 17. 2 | 27. 2 | 37. 3 |
| 8. 3 | 18. 3 | 28. 2 | 38. 3 |
| 9. 3 | 19. 2 | 29. 2 | 39. 3 |
| 10. 3 | 20. 2 | 30. 2 | 40. 3 |

(40x 2.5 = 100 புள்ளி)

### இல - 5 வினாத்தாள் - II விடைகள்

01) 1. பணிந்து
2. ஈசன்
3. நீ
4. பிறந்த
5. நீ
6. உன்னுயிரை (6 புள்ளி)

02) 1. பறந்தன
2. வகிக்கின்றது (2 புள்ளி)

03) 1. அழுக்குகளைத்
2. வலை (2 புள்ளி)

04) 1. நன்மை தீமை
2. பொறாமை (2 புள்ளி)

05) 1. கடக்கக் கருதவும் வேண்டா - மடைத்தலையில் வாடி இருக்குமாம் கொக்கு
2. முய்வுண்டா முய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு (3 புள்ளி)

06) எதையும் அளவோடு செய்தல் வேண்டும் (2 புள்ளி)

07) 1. உடன்பாடு
2. உவமானம் (2 புள்ளி)

08) 1. கன்று / போதகம்
2. குட்டி / குருளை (2 புள்ளி)

09) 1. செய்திகளை உடனுக்குடன் ஒலிபரப்புவதில் வானொலி பிரதான இடம் வகிக்கிறது
2. எமது உடலை சுத்தமாக வைத்திருந்தால் நோய்கள் தொற்றாது (2 புள்ளி)

10) 1. இதழ்
2. தங்கம்
3. கருமை (3 புள்ளி)

11) 1. Sri Lankan
2. an (2 புள்ளி)

12) 1. பந்தைப் பிடியுங்கள்
2. நாங்கள் விளையாட்டை ஆரம்பிப்போமா? (2 புள்ளி)

13) 1. God bless you (1 புள்ளி)

14) 1. தம்பி புத்தகத்தை எடுங்கள் (1 புள்ளி)


15) 1. அம்மா வ(த்)து (G) கௌாவா(1 புள்ளி)

16) பொருத்தமான மூன்று வாக்கியங்கள் (6 புள்ளி)

17) 5481

18) XII

19) 1.



2. 0.75

20) 20

21) 1. 54cm
2. 72 சதுர சென்ரி மிற்றர்

22) 280km

23) 54

24) 24, 48, 72

25) 5 மணித்தியாலம் 35 நிமிடம்

26) 43

27) 1. 80.00
2. ரூ. 560.00

28) 47cm

29) 1 1/4 / 5/4

30) 8

31) 11 (15X2=30 புள்ளி)

| | | |
|---|---|---|
| 32) 4 | 42) 2 | 52) 2 |
| 33) 2 | 43) 1 | 53) 1 |
| 34) 1 | 44) 2 | 54) 2 |
| 35) 1 | 45) 1 | 55) 2 |
| 36) 3 | 46) 3 | 56) 2 |
| 37) 2 | 47) 2 | 57) 4 |
| 38) 3 | 48) 1 | 58) 2 |
| 39) 4 | 49) 1 | 59) இணைக்குக |
| 40) 2 | 50) 2 | 60) 2 |
| 41) 4 | 51) 4 | |

(30 புள்ளி)

# கூட்டமைப்புக்கு உத்தியோகபூர்வ பேச்சாளரோ, கொறடாவோ இல்லை

## பிரச்னைகளுக்கு அதுவே காரணம் என்கின்றார் புளொட் தலைவர்



யாழ்ப்பாணம், ஜூன் 15

**“தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உத்தியோகபூர்வமான பேச்சாளரோ அல்லது கொறடாவோ இல்லை. உத்தியோகப்பற்ற வகையிலேயே செயல்படுகின்றனர். இவற்றைச் சீர்செய்யுமாறு கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடம் பல தடவைகள் கேட்டிருந்தேன். ஆனாலும், அவை சீர்செய்யப்படவில்லை. அதனால்தான் இவ்வளவு பிரச்னைகள் உருவாகின்றன.”**

- இவ்வாறு புளொட் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

யாழ். கந்தரோடையில் உள்ள அவரது வீட்டில் நேற்றுமுன்தினம் ஊடகங்களைச் சந்தித்துப் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து விலகி ரெலோ மற்றும் புளொட் கட்சிகள் சுயாதீனமாக நாடாளுமன்றில் செயற்பட இதுவரை தீர்மானம் எடுக்கவில்லை. அதேநேரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுவுக்குள் இருக்கும் பிரச்னைகள் சம்பந்தமாக நாங்கள் ரெலோவுடன் பல தடவைகள் பேசியுள்ளோம்.

பாராளுமன்றத்தில் எமக்கான நேரப் பங்கீடு என்பது பல வருடங்களாகப் பிரச்னைகளுக்குரிய ஒன்றாகவே காணப்படுகின்றது. எங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நேரம் என்பது அரிதாகவே கிடைக்கின்றது. அதுவும் கஷ்டப்பட்டுப் பெற வேண்டியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குழு பேசிய பின்னர் இந்த விவகாரம் தொடர்பாக முடிவை நாம் எடுப்போம்.

எங்களுக்கு வாக்களித்த மக்கள் மத்தியிலே எம் மீது தப்பான அபிப்பிராயமொன்று காணப்படுகின்றது. நாம் பாராளுமன்றில் தங்கள் பிரச்னைகளைப் பேசுவதில்லை என அவர்கள் நினைக்கின்றனர். ஆகவே, இந்த விடயத்தில் கவனமெடுத்துச் செய்ய வேண்டிய தேவையுள்ளது” - என்றார்.

(இ - 03)

# ஒரு ரூபாயாலும் பஸ் கட்டணம் இந்த முறை அதிகரிக்கப்படாது

## பஸ் உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை என்கின்றார் இராஜாங்க அமைச்சர்



கொழும்பு, ஜூன் 15

“எரிபொருள் விலை அதிகரிப்பால் பாதிக்கப்பட்டுள்ள பஸ் உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் கலந்துரையாடப் படவுள்ளது. அதேவேளை, ஒரு ரூபாயாலேனும் பஸ் கட்டணத்தை அதிகரிக்கப் போவதில்லையென்பதைத் தெளிவாக கூறுகின்றேன்.”

- இவ்வாறு பஸ் போக்குவரத்துச் சேவைகள் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இதுவரை பொதுமக்களுக்கு இயலுமானவரை பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டு விட்டன எனவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் பயணத் தடை காரணமாக இருக்கைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பயணிகளை ஏற்றிச் செல்ல வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்ட போது, பஸ் கட்டணத்தில் 20 வீத திருத்தம் மேற்கொள்ளப்பட்டமையால் இந்தத் தடவை கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய அவசியமில்லை எனவும் அவர் கூறினார்.

இந்தநிலையில், பஸ் உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(இ)

# நேற்றும் கரையொதுங்கின உயிரிழந்த டொல்பின், கடலாமைகளின் உடல்கள்

கொழும்பு, ஜூன் 15

உயிரிழந்த டொல்பின் ஒன்றும், 05 கடலாமைகளும் சில பகுதிகளில் நேற்றும் கரையொதுங்கியுள்ளன.



சிலாபம், உடப்பு, உனுப்பிட்டிய பாரிபாடு, களுத்துறை, அளுத்கம, களுத்துறை வடக்கு ஆகிய கரையோரங்களில் இவற்றின் உடல்கள் கரையொதுங்கியுள்ளன.

தீ விபத்துக்குள்ளாகி கடலில் மூழ்கிக் கொண்டிருக்கும் ‘எக்ஸ் - பிரஸ் பேர்ள்’ கப்பலிலிருந்து வெளியேறும் பிளாஸ்டிக் உள்ளிட்ட கழிவுப் பொருட்களால் கடல்வாழ் உயிரினங்கள் உயிரிழந்திருக்கக் கூடும் என்ற சந்தேகம் காணப்படுவதால் அவற்றுக்கான நட்டஈட்டைப் பெற்றுக் கொள்ள நீதிமன்றத்தை நாடவுள்ளதாக வனஜீவராசிகள் அமைச்சு அறிவித்துள்ளது.

வனஜீவராசிகள் கட்டளைச் சட்டத்துக்கு அமைய, கடலில் மூழ்கும் கப்பலுக்குச் சொந்தமான நிறுவனத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக வனஜீவராசிகள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன தெரிவித்தார்.

கடந்த ஒரு வாரத்தில் மாத்திரம் 31 இற்கும் அதிகமான கடலாமைகள் உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன. இவற்றைத் தவிர 05 டொல்பின்களின் உடல்களும் கரையொதுங்கியுள்ளன என்று வனஜீவராசிகள் அமைச்சு தெரிவித்துள்ளது. வெள்ளவத்தை, தெஹிவளை, மொரட்டுவை, எகொட உயன, பாணந்துறை, கொஸ்கொட, இந்துருவ, காலி, உனவட்டுன, குடாவெல்ல, மாரவில மற்றும் துடாவெவ ஆகிய பகுதிகளில் இவை கரையொதுங்கியுள்ளன என்றும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

(இ)

# மின்சார சபைக்குள் நிலவும் மாபியாவால் மின் கட்டணம் அதிகரிக்கப்படும் அபாயம்

## பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 15

நாட்டில் மின்சார சபைக்குள் நிலவும் மாபியாவால் எதிர்வரும் நாட்களில் மின் கட்டணம் அதிகரிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது என இலங்கை மின்சார சபையின் பொது ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

காலியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இலங்கை மின்சார சபையின் பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் மாலக விக்கிரமசிங்க இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

ஊழலுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள், சந்தர்ப்பவாத சங்கத்தினர் உள்ளிட்ட தரப்பினரை மின்சார சபை மாபியா என அழைக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மின்சார சபை சட்டமூலத்தின் 30ஆவது சரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கான நிகழ்ச்சி நிரலை இந்த அரசு செயற்படுத்தவுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(இ)

# மலையக மக்களின் இருப்புக்கும் சமஷ்டி முறைமையே பாதுகாப்பு!

## மஸ்கெலியாவில் கஜேந்திரன் எம்.பி. தெரிவிப்பு

மஸ்கெலியா, ஜூன் 15

“ஒற்றையாட்சி முறைமை ஒழிக்கப்பட்டு சமஷ்டி அரசமைப்பு கொண்டு வரப்பட வேண்டும். அதற்காகவே நாம் போராடி வருகின்றோம். சமஷ்டி முறைமை வருகின்றபோது மலையக மக்களின் இருப்பும் பாதுகாக்கப்படும்.”

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

பொது முடக்கத்தால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள மஸ்கெலியா பகுதிகளில் உள்ள சுமார் 600 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்னெடுத்திருந்தது. இந்த நிவாரணப் பொருட்களை வழங்கி வைத்ததன் பின் சமகால அரசியல் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே கஜேந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து குரல் கொடுத்தோம். அதேபோல் மலையக மக்களுக்கான காணி மற்றும் அரசியல் உரிமைகளுக்காகவும் குரல் கொடுப்போம்.

இந்த நாட்டில் ஒற்றையாட்சி முறைமையை ஒழிக்கப்பட்டு சமஷ்டி முறைமையை உருவாக்கும் அரசமைப்பு கொண்டுவரப்படவேண்டும். அதற்காகவே போராடி வருகின்றோம். அவ்வாறு சமஷ்டி முறைமை வருகின்றபோது மலையக மக்களின் இருப்பும் பாதுகாக்கப்படும். மலையக மக்களுடன் இணைந்து பயணிக்க நாம் தயார்.

கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு, சீனாவின் முகவர்களாகச் செயற்பட்டு நாட்டின் வளங்களை விற்கின்றது. பிராந்தியத்தில் சீனாவின் செல்வாக்கு உயரும் வகையில் செயற்பட்டு வருகின்றது. மக்கள் நலன் பற்றி இந்த அரசு சிந்திப்பதில்லை. அவ்வாறு சிந்தித்திருந்தால் இவ்வாறு எரிபொருட்களின் விலை உயர்வடைந்திருக்காது.

‘செலன’ இணைந்த நிறுவன திட்டத்தின் ஊடாக கொழும்பிலுள்ள அசையும் மற்றும் அசையா சொத்துகளை சீனாவுக்கு வழங்க ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. தென்பகுதியைத் தாரைவார்ப்பது மட்டுமல்லாமல் வடக்கில் 7 ஏக்கர் காணியிலுள்ள ஜனாதிபதி மாளிகையும் குத்தகைக்கு வழங்க அரச தரப்பினர் முற்படுகின்றனர் - என்றார்.

(இ)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 1,198 பேர் கைது

கொழும்பு, ஜூன் 15

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 1,198 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தனிமைப்படுத்தல் சட்டம் நடைமுறைக்கு வந்த கடந்த வருடம் இதுவரை ஒக்ரோபர் மாதம் முதல் இதுவரை 32 ஆயிரத்து 593 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில் அதனை மீறி செயற்பட்ட 160 பேர் நேற்றுமுன்தினம் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுவோரைக் கைது செய்யும் நோக்கில் ட்ரோன் கமெராக்களைத் தொடர்ந்தும் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(இ)

# 4 கோடி பெண் பிள்ளைகள் ஆரம்ப கல்வியை பெற உதவி

## ஜி - 7 நாடுகளின் தலைவர்கள் உறுதி

லண்டன், ஜூன் 15

ஜி-7 நாடுகளின் மாநாடு வெற்றிகரமாக முடிவடைந்ததாக அவை அறிவித்துள்ளன. அடுத்த ஐந்து ஆண்டுகளில் 4 கோடி பெண் பிள்ளைகள் ஆரம்ப பாடசாலைகளில் சேர்வதற்கும், 2 கோடி பிள்ளைகள் ஆரம்பக் கல்வியின் பின்னர் கற்பதற்கும் இந்த நாடுகள் உதவிகளை அளிக்க முன்வந்துள்ளன.

மேலும், உலகின் கல்வியை மேம்படுத்துவதற்கான திட்டங்களையும் இந்தக் கூட்டணி நடைமுறைப்படுத்தவுள்ளது. உலகின் ஒவ்வொரு பிள்ளையும் கல்வி பெறுவதை உறுதி செய்தவற்கான இந்தத் திட்டத்துக்காக 50வீத நிதியை ஜி-7 நாடுகள் வழங்க உறுதியளித்துள்ளன. இதில், பிரிட்டனின் பங்களிப்பு 43 கோடி டொலர்கள் (நம் நாட்டு மதிப்பில் சுமார் 8,600 கோடி ரூபாய்) ஆகும்.




பருவநிலை மாற்றத்திலிருந்து உலகைப் பாதுகாப்பதற்கு இந்த ஆண்டின் இறுதியில் சர்வதேச பருவநிலை மாநாட்டை பிரிட்டன் நடத்தவுள்ளது. இந்த மாநாட்டில் பருவநிலை மாற்றத்திலிருந்து உலகைப் பாதுகாப்பது குறித்து விவாதிக்கப்படும். பருவநிலை மாற்றத்துக்குக் காரணமான வாயு மாசுக்களில் 20 சதவீதத்தை ஜி-7 உறுப்பு நாடுகள்தான் காற்றில் கலக்கின்றன. இந்த சூழலில், இதுதொடர்பான நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ள தற்போது நடைபெற்றுள்ள ஜி-7 மாநாட்டில் உறுப்பு நாடுகள் உறுதிபூண்டுள்ளன என்று பிரிட்டன் பிரதமர் தெரிவித்துள்ளார்.

ஏழை நாடுகளுக்கு 2022ஆம் ஆண்டுக்குள் 100 கோடி கொரோனா தடுப்பூசிகளை வழங்க ஜி-7 நாடுகள் ஒப்புதல் அளித்துள்ளன. கோவக்ஸ் திட்டத்தின் மூலம் இந்தத் தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளன. தவிர, முன்னதாக சர்வதேச அளவில் சீனாவின் வர்த்தக ஆதிக்கத்தை தடுப்பதற்கான அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் திட்டம், வருங்காலத்தில் கொரோனா போன்ற பிற கொள்ளை நோய்களிலிருந்து பாதுகாப்பதற்கான செயல்திட்டம் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஜி-7 உறுப்பு நாடுகளின் தலைவர்கள் ஆலோசனை நடத்தி அவற்றுக்கான ஒப்புதல்களை அளித்தனர்.

தொழில் வளர்ச்சியில் முன்னிலை வகிக்கும் நாடுகள் இடம்பெற்றுள்ள ஜி -7 கூட்டமைப்பின் 47ஆவது மாநாடு பிரிட்டனின் கர்பிஸ் குடாவின் செ. ஐவ்ஸ் நகரில் வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெற்றது. இதில், அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, கனடா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர்கள் கலந்துகொண்டனர். (ஐ)



# இஸ்ரேல் பிரதமராக பென்னட் பதவியேற்பு

## நெதன்யாகு ஆட்சிக்கு முடிவு!

டெல்அவிவ், ஜூன் 15

இஸ்ரேலின் புதிய பிரதமராக நப்தாலி பென்னட் பதவி ஏற்றுக் கொண்டார்.

இதேசமயம் கடந்த 2009ஆம் ஆண்டிலிருந்து இஸ்ரேலில் பிரதமராக பதவி வகித்த பெஞ்சமின் நெதன்யாகு ஆட்சியை இழந்துள்ளார்.

அங்கு 2 ஆண்டுகளாக 4 முறை பாராளுமன்ற தேர்தல் நடந்தும் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை பலம் கிடைக்கவில்லை.

கடந்த மார்ச் மாதம் 23ஆம் திகதி நடந்த தேர்தலில், மொத்தம் உள்ள 120 இடங்களில் பெஞ்சமின் நெதன்யாகு கட்சி 54 இடங்களைப் பிடித்தது. தனிப்பெரும் கட்சியாக வந்தபோதும் அவரால் கூட்டணி அரசாங்கத்தை அமைக்க முடியவில்லை.

இந்த நிலையில், அங்கு 8 எதிர்க்கட்சிகள் ஒன்றாக சேர்ந்து கூட்டணி அமைத்தன. இஸ்ரேலில் அரபு கட்சி தலைமையில் 8 அரசியல் கட்சிகள் கூட்டாக இணைந்து நெதன்யாகுவின் ஆட்சிக்கு தற்போது முற்றுப்புள்ளி வைத்துள்ளன.

இந்தக் கூட்டணிக் கட்சிகள் சுழற்சி முறையில் பிரதமர் பதவியைப் பகிர்ந்துகொள்ளவுள்ளன. இதன்படி வலதுசாரி கட்சியான யாமினா கட்சியின் தலைவர் நப்தாலி பென்னட் பிரதமராக பதவி ஏற்றார். (ஐ)

# "ஜி - 7 போன்ற சிறு குழுக்கள் உலகை ஆட்சி செய்யமுடியாது"

லண்டன், ஜூன் 15

ஜி - 7 போன்ற உலகநாடுகள் சிலவற்றை உள்ளடக்கிய சிறு குழுவால், இந்த உலகத்தை ஆட்சி செய்ய முடியாது என்று சீனா விமர்சித்துள்ளது.

ஜி - 7 கூட்டமைப்பின் 47ஆவது உச்சி மாநாடு கடந்த வெள்ளிக்கிழமை பிரிட்டனில் ஆரம்பமானது. இதன்போது, சீனா முன்வைத்துள்ள 'பெல்ட் அண்ட் றோட்' திட்டத்துக்கு ஜி-7 நாடுகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

இதற்கு பதிலாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் முன்வைத்துள்ள ஹபில்ட் பேக் பெட்டர் வேர்ள்ட்' (பி3டபிள்யூ) எனும் திட்டத்தை செயல்படுத்தலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பிரிட்டனில் உள்ள சீன தூதரகத்தின் செய்தி தொடர்பாளர், "ஒருசில நாடுகள் அடங்கிய சிறு குழுக்கள் முடிவு எடுக்கும் காலம் நீண்ட நாட்களுக்கு முன்னதாகவே முடிந்துவிட்டது. சிறு குழுக்கள் இனியும் உலகை ஆள முடியாது.

சீனாவைப் பொறுத்தவரை அளவில் பெரிய நாடோ அல்லது சிறிய நாடோ, பலவீனமானதோ அல்லது பலமான நாடோ, ஏழையோ அல்லது பணக்கார நாடோ அனைத்தும் சமமே. சர்வதேச விவகாரங்களில் அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து ஆலோசித்து முடிவு எடுக்க வேண்டும். ஐ.நா., கொள்கையை ஒட்டிய சர்வதேச முடிவுகள் எட்டப்பட வேண்டும். ஜி -7 போன்ற குழுக்கள் உலகை ஆள முடியாது" என்று கூறியிருக்கிறார்.



# உலகின் மிகப்பெரிய குடும்ப தலைவர் மரணம்!

புதுடில்லி, ஜூன் 15

உலகின் மிகப்பெரிய குடும்பம் என்று கருதப்படும் இந்தியாவின் மிசோராம் மாநிலத்தைச் சேர்ந்த குடும்பத்தின் தலைவர் ஜியோனா சானா தமது 76ஆவது வயதில் உயிரிழந்தார்.

இதனை மிசோராம் மாநில முதல்வர் முதலமைச்சர் சொரம்தங்கா தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

ஜியோனா சானாவுன்னு 38 மனைவிகள் மற்றும் 89 பிள்ளைகள் உள்ளனர் என்று அந்தப் பதிவில் கூறியுள்ளார்.

மிசோராம் தலைநகர் ஐஸ்வாலில் உள்ள ட்ரினிட்டி மருத்துவமனையில் நேற்று முன்தினம் மதியம் 3 மணிக்கு அவர் இறந்தார்.

இவருக்கு 33 பேரக் குழந்தைகளும் உள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தான் தொடர்ந்து திருமணம் செய்து கொள்வது குறித்து குடும்பத்தில் எந்த சண்டையும் ஏற்படவில்லை என்று தமது பேட்டிகளில் அவர் பலமுறை தெரிவித்துள்ளார்.

1945-ஆம் ஆண்டு ஜூலை 21 ஆம் திகதி பிறந்த ஜியோனா தனது 17-ஆவது வயதில் முதல் திருமணம் செய்துள்ளார்.

இறக்கும் வரை அவரது அனைத்து மனைவிகள், பிள்ளைகள் மற்றும் பேரக் குழந்தைகளுடன் ஒரே வீட்டில் ஜியோனா சானா வசித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சீனாவில் எரிவாயு குழாய் வெடித்து 12பேர் மரணம் 138 பேர் படுகாயம்!

பீஜிங், ஜூன் 15

சீனாவில் எரிவாயு குழாய் வெடித்ததில் 12 பேர் பலியாகினர். 138 பேர் காயமடைந்தனர்.

சீனாவின் ஷியான் நகரத்தில் உள்ள குடியிருப்பு பகுதியில் எரிவாயு குழாய் நேற்று முன்தினம் திடீரென வெடித்தது. இந்த சம்பவத்தில் சந்தை மற்றும் வீடுகளும் முற்றிலும் சேதமடைந்தன.



இதில் 12 பேர் பலியானார்கள். தகவல் அறிந்து வந்த மீட்புக்குழுவினர் 150 பேரை இடிபாடுகளில் இருந்து மீட்டனர். அவர்களில் 138 பேர் காயமடைந்தனர். உடனடியாக அவர்கள் அனைவரும் அருகிலிருந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். விபத்துக்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை. (ஐ)



# சங்ககாரவுக்கு ஐ.சி.சி. கௌரவம்!

*டுபாய், ஜூன் 15*

*சர்வதேச கிரிக்கெட் சபையினால் வழங்கப்படும் கௌரவமான ஹோல் ஒப் பேம் (HALL OF FAME) விருதுக்கு, இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்ககாரவின் பெயர் உள்வாங்கப்பட்டுள்ளது.*

*குறித்த கௌரவமானது சர்வதேச ரீதியில் கிரிக்கெட் விளையாட்டுக்காக செய்த அர்ப்பணிப்பை கருத்தில்கொண்டு வழங்கப்படுகின்றது. சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் மத்தியில், சிறந்த விக்கெட் காப்பாளராகவும் சிறந்த துடுப்பாட்ட வீரருமாக விளங்கிய ஒரு சில வீரர்களுள் குமார் சங்ககாரவும் உள்ளடங்குவார் என்று சர்வதேச கிரிக்கெட் சபை குறிப்பிட்டுள்ளது.*

*சர்வதேச கிரிக்கெட் சபையால் வழங்கப்படும் இந்த கௌரவ நாமத்தை பெறும் இலங்கை கிரிக்கெட் அணியின் 2ஆவது வீரராக குமார் சங்ககார விளங்குகின்றார்.*

*இதற்கு முன்னர் இலங்கை அணியின் சுழல்பந்து வீச்சு ஜாம்பவான் முத்தையா முரளிதரன் 2016 ஆம் ஆண்டு இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி முதல் தடவையாக இந்த கௌரவ நாமத்தை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)*

# யூரோ கிண்ண உதைபந்தாட்டம்: பெல்ஜியத்திடம் வீழ்ந்தது ரஷ்யா!

*சென். பீற்றர்ஸ், ஜூன் 15*

*ரஷ்யாவை 0 -3 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது பெல்ஜியம் அணி. இதேபோன்று மற்றொரு போட்டியில் இங்கிலாந்து குரோஷியாவை வெற்றி கொண்டது.*

*யூரோ கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் 'பி' பிரிவில் இடம் பிடித்துள்ள ரஷ்யா - பெல்ஜியம் அணிகள் நேற்று முன்தினம் இரவு சென். பீற்றர்ஸ்பேர்க் நகரில் மோதின.*

*10ஆவது நிமிடத்தில் பெல்ஜியம் வீரர் லியாண்டர் டெண்டன்கர் அடித்த பந்தை ரஷ்யாவின் தடுப்பாட்ட வீரரான அண்ட்ரி செமியோனோவ் தடுக்க தவறினார்.*

*அப்போது அருகில் நின்ற லூகாகு விரைவாக செயல்பட்டு பந்தை கோல் வலைக்குள் செலுத்த பெல்ஜியம் 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.*

*34ஆவது நிமிடத்தில் பெல்ஜியம் 2ஆவது கோலை அடித்தது. தோர்கன் ஹஸார்ட் இலக்கை நோக்கி அடித்த பந்தை ரஷ்ய அணியின் கோல் காப்பாளர் அன்ரன் ஷூனின் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டார். எனினும், அவர் மீது பட்டு திரும்பிய பந்தை தோமஸ் மியூனியர் கோலாக மாற்றினார்.*



*இதனால் முதல் பாதியில் பெல்ஜியம் அணி 2-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.*

*2ஆவது பாதி ஆட்டத்தில் ரஷ்ய அணி கோல் அடிக்க மேற்கொண்ட முயற்சிக்கு பலன் கிடைக்கவில்லை. 88ஆவது நிமிடத்தில் தோமஸ் மியூனியரிடம் இருந்து பந்தை பெற்ற லூகாகு அருமையாக கடத்திச் சென்று கோல் அடித்தார். இதனால், பெல்ஜியம் 3-0 என முன்னிலை பெற்றது. இதன் பின்னர் மேற்கொண்டு கோல் ஏதும் அடிக்கப்படவில்லை. முடிவில் பெல்ஜியம் 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.லண்டன் நகரில் 'டி' பிரிவு அணிகளுக்கு நடைபெற்ற மற்றொரு போட்டியில் இங்கிலாந்து - குரோஷியா அணிகள் மோதின. இதில் இங்கிலாந்து 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. 57ஆவது நிமிடத்தில் ரஹீம் ஸ்டெர்லிங் கோல் அடித்து அசத்தினார். (ஐ)*




# உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பில் வில்லியம்ஸன் விளையாடுவார்!

## ரொம் லதம் நம்பிக்கை தெரிவிப்பு

*லண்டன், ஜூன் 15*

*உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் கேன் வில்லியம்ஸன் விளையாடுவார் என ரொம் லதம்நம்பிக்கை தெரிவித்துள்ளார்.*

*இந்தியா - நியூசிலாந்து அணிகள் மோதும் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி எதிர்வரும் 18 ஆம் திகதி தொடங்குகிறது.*

*இந்த நிலையில் காயம் காரணமாக கேன் வில்லியம்ஸன் நேற்று முன்தினம் முடிவடைந்த இங்கிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் விளையாடவில்லை. அவருடன், வட்லிங், சாண்ட்னர் ஆகியோரும் காயத்தால் களமிறங்கவில்லை.*

*இந்த நிலையில், வில்லியம்ஸன், வட்லிங் ஆகியோர் தற்போது ஓய்வு எடுத்து வருகிறார்கள். இருவரும், உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் விளையாடுவர் என்று இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கு தலைமை தாங்கிய ரொம் லதம் தெரிவித்தார். (ஐ)*



# பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் ஜொகோவிக் சம்பியன்!

*பாரிஸ், ஜூன் 15*

*பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் தொடரில் சேர்பியாவின் ஜொகோவிக் சம்பியன் பட்டம் வென்றார்.*

*கிராண்ட்ஸ்லம் அந்தஸ்து பெற்ற பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான இறுதப் போட்டி பாரிஸில் நேற்று முன்தினம் இரவு நடந்தது.*

*இதில் உலகின் முதல் நிலை வீரர் சேர்பியாவின் நோவக் ஜொகோவிக், 5ஆம் நிலை வீரரான கிரீஸ் நாட்டைச் சிட்ஸிபாஸை எதிர்கொண்டார்.*

*சுமார் 4 மணி நேரத்துக்கும் மேல் நீடித்த இந்த ஆட்டத்தில் 6-7, 2-6, 6-3, 6-2, 6-4 என்ற செற் கணக்கில் சிடாஸை வீழ்த்தி வாகை சூடினார் ஜொகோவிக்.*

*இது ஜொகோவிக் வென்ற 19ஆவது கிராண்ட்ஸ்லம் பட்டமாகும்.*

*ரோஜர் பெடரர், ரபேல் நடால் ஆகியோர் தலா 20 கிராண்ட்ஸ்லம் பட்டங்களை வென்று முதலிடத்தில் உள்ளனர். (ஐ)*



# அதிர்ச்சி, நினைவிழப்பு விரைந்து குணமாவேன்!

## உடல்நலன் குறித்து பிளசிஸ்

*அபுதாபி, ஜூன் 15*

*கிரிக்கெட் போட்டியில் சக வீரருடன் மோதி காயமடைந்த தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர் டூ பிளசிஸ் தனது உடல் நலன் குறித்து தகவல் பகிர்ந்துள்ளார்.*

*பாகிஸ்தான் சுப்பர் லீக்கில் குவெட்டா க்ளாடியேட்டர்ஸ் அணிக்காக டூ பிளசிஸ் விளையாடி வருகிறார். கடந்த சனிக்கிழமை நடந்த போட்டியில் களத்தடுப்பில் ஈடுபட்ட அவர் பௌண்ட்ரி ஒன்றை தடுக்க முனைந்தபோது சக வீரர் முகமது ஹூஸ்னைனுடன் மோதிக் கொண்டார்.*

*இதில், அவருக்குக் காயம் ஏற்பட்டு உடனடியாக அபுதாபியில் இருக்கும் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். துடுப்பாட்டத்திலும் அவர் களமிறங்கவில்லை.*

*இதைத் தொடர்ந்து ரசிகர்கள் அவர் நலமடைய வேண்டி ருவிட்டில் பிரார்த்தனை பதிவுகளை இட்டனர். இந்த நிலையில், டூ பிளசிஸ், "என்னை வாழ்த்திய அத்தனை பேருக்கும் நன்றி. நான் மீண்டும் ஹோட்டலில் ஓய்வெடுத்து வருகிறேன். பலமாக மோதியதில் மூளையில் அதிர்ச்சியும் கொஞ்சம் நினைவிழப்பும் ஏற்பட்டுள்ளது. ஆனால், நான் குணமடைந்துவிடுவேன். விரைவில் களம் காணுவேன் என்று நம்பிகிறேன்", என்று பதிவிட்டுள்ளார். (ஐ)*




# காரணம் எதுவுமின்றி அமைச்சரை பதவி விலக கோருவது வேடிக்கை

## சாகரவுக்கு மஹிந்த பதில்



கொழும்பு, ஜூன் 15

**"எரிபொருள் விலை அதிகரிப்பு, ஜனாதிபதி தலைமையிலான எமது அரசின் தீர்மானமாகும். இந்தநிலையில், வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவைப் பதவி விலகுமாறு கோருவது வேடிக்கையானது."**

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஜனாதிபதி, நான் மற்றும் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் கூடியே எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கான முடிவை எடுத்தோம். இதற்கு நிதி அமைச்சர் என்ற வகையில் நான் பூரண அனுமதியை வழங்கினேன்.

வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில மட்டும் தனித்திருந்து எரிபொருள் விலையை அதிகரிக்கும் தீர்மானத்தை எடுக்கவில்லை. இந்தத் தீர்மானத்தை உதய கம்மன்பிலவை உள்ளடக்கிய வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உபகுழுவே எடுத்தது.

இந்தநிலையில், வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவைப் பதவி விலகக் கோருவது வேடிக்கையானது. அமைச்சரை பதவி விலகுமாறு கோருவதன் உள்நோக்கம் தொடர்பில் ஆராய்வேன். பிரச்னையை ஊதிப் பெருக்குவது எமது அரசின் நோக்கம் அல்ல. எனினும், இந்த விவகாரம் தொடர்பில் எதிரணியினர் வாய்க்கு வந்த மாதிரி விமர்சனக் கருத்துக்களை வெளியிடுவதுதான் மேலும் வேடிக்கையாக இருக்கின்றது" - என்றார். (இ)

# எரிபொருட்களின் விலை அதிகரிப்புக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

## ஐக்கிய மக்கள் சக்தி உத்தேசம்



கொழும்பு, ஜூன் 15

எரிபொருட்களின் விலை உயர்வால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை மையமாகக்கொண்டு நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை முன்வைப்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உத்தேசித்துள்ளது.

நேற்றிரவும் இன்று காலையும் நடைபெற்ற கட்சியின் உள்ளகக் கலந்துரையாடல்களில் இவ்விவகாரம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

துறைசார் அமைச்சருக்கு எதிராகவா அல்லது அரசுக்கு எதிராகவா என்பது பற்றி விரைவில் அறிவிக்கப்படவுள்ளது.

தற்போதைய பிரதான எதிர்க்கட்சியால் முன்வைக்கப்படும் முதல் நம்பிக்கையில்லாப் பிரேரணை இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# பொலிஸ் வேடமிட்டவர் கோப்பாயில் மாட்டினார்

யாழ்ப்பாணம், ஜூன் 15

தன்னைப் பொலிஸ் உத்தியோகத்தராகக் காண்பித்து நடமாடிய ஒருவரைக் கோப்பாய் போக்குவரத்துப் பொலிஸார் நேற்று கைது செய்தனர்.

அச்செழு பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் தனது மோட்டார் சைக்கிளில் பொலிஸாரின் சின்னம் ஒட்டியிருந்ததுடன் தனது தொலைபேசியில் பொலிஸார் அணியும் ரீசேட் அணிந்து எடுத்த போட்டோவையும் வைத்திருந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் புலனாய்வுத் துறையினருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் குறித்த நபர் கோப்பாய் பகுதியில் வைத்து கோப்பாய் போக்குவரத்துப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (இ - 03)

# மரண அறிவித்தல்



**தோற்றம் 15.03.1941 மறைவு 13. 06. 2021**

## திருமதி குமாரசாமி தங்கரத்தினம்

யாழ். இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், சென்னை போரூரை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி தங்கரத்தினம் அவர்கள் நேற்றுமுன்தினம் (13-06-2021) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை – நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை – மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற குமாரசாமி அவர்களின் அன்பு மனைவியும், சிவானந்தம், சரஸ்வதி, வாவா, பிறேம், கலா, ரவி ரஞ்சன், செல்வன், சாந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும்,

காலஞ்சென்ற மணியம், அழகு, கிளி ஆகியோரின் அன்புச் சகோதரியும்,சின்னக்கிளி, காலஞ்சென்றவர்களான மகாலிங்கம், காண்டீபன், மதி மற்றும் சிறி, அமுதா, தீபா, ராஜா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கீதா, ரூபன், உஷா, கஜன், கவி, நிதன், சாரு கண்ணன், காலஞ்சென்றவர்களான அஸ்வின், சிந்துஜா மற்றும் அனந்தன், சிந்து, ராயூ, தர்சா, சுபா, பிரகாசினி, பிரவின், பதுமிலன், கஸ்வினி, நிஷாந், நிதுஷன், சிந்தா, சுதா, துஷி, பவதாரின், மைதிலி, சாரங்கன், லக்சிதா, நிலோஜன், யோகேஸ் ஆகியோரின் அன்புப் பேத்தியும், ரதிப், ஆகாஷ், ஜெனன், லகிஸ், தனுஜா, நிதுஷன், தினேஸ், பவித்திரா, சுஜீத்திரா, தனுஷ்சியா, காலஞ்சென்ற ஐங்கரன், ஹரிஸ், சைத்தவி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 13-06-2021 ஞாயிற்றுக்கிழமை அன்று சென்னை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**தொடர்புகளுக்கு:**
**ராஜா - மருமகன்** :+447447904085
**ரஞ்சன் - மகன்** :+16474000168
**செல்வன் - மகன்** :+16478955196
**கலா - மகள்** : +41762473172
**ரவி - மகன்** : +919884155895
**சிவானந்தம் - மகன் :**+94775356331
**சாந்தி - மகள் :**+447450933632

# குருநகரில் நேற்று திருமண நிகழ்வில் பங்கேற்றவர்கள் தனிமைப்படுத்தலில்



யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ்ப்பாணம், குருநகர் பகுதியில் அனுமதிக்கு மேலதிகமாகப் பலரும் திருமண நிகழ்வில் பங்கேற்றதால் அந்த நிகழ்வில் பங்கேற்ற 16 பேர் கட்டாயத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

குருநகர் பகுதியில் யாழ்ப்பாணம் பொலிஸார் நேற்று கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டபோது அதிகளவானவர்கள் திருமண நிகழ்வில் பங்குபற்றியதை அவதானித்து யாழ்ப்பாண மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு அறிவித்தனர்.

இதையடுத்து அங்கு வந்த யாழ்ப்பாணம் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் 15 பேருக்கும் அதிகளவானவர்கள் திருமண நிகழ்வில் பங்குபற்றியதை உறுதிப்படுத்தி அவர்களைத் தனிமைப்படுத்தினர்.

நாடு முழுவதும் பயணத் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில் 15 பேருக்கு உட்பட்டு திருமணப் பதிவை மேற்கொள்ள முடியும் என அரசு அறிவித்திருந்த நிலையில் அதற்கு மேலதிகமாக அங்கு பலரும் ஒன்றுகூடியதால் தனிமைப்படுத்தியதாக யாழ்ப்பாணம் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் தெரிவித்தனர். (இ - 03)

## இலங்கையை...

கின்றது.

கடந்த மாதம் இலங்கை பாராளுமன்றம் சர்ச்சைக்குரிய கொழும்பு துறைமுகநகர பொருளாதார ஆணைக்குழு திட்டத்தை இலங்கை நிறைவேற்றியது. எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பிற்கு மத்தியிலும், கொழும்பு துறைமுகநகரம் இலங்கைக்குள் ஒரு சீன மாகாணமாக மாறலாம் என்ற கரிசனைகளிற்கு மத்தியிலும் இலங்கைப் பாராளுமன்றம் கொழும்பு துறைமுகநகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தை நிறைவேற்றியது.

உத்தேச புதிய கொழும்பு துறைமுகநகர பொருளாதார ஆணைக்குழு பரந்துபட்ட அதிகாரங்களை கொண்டிருக்கும் என கருதப்படுகின்றது. மேலும், இலங்கையின் மாநகரசபை, நகர அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றின் சட்டமூலங்கள் கொழும்பு துறைமுகநகரை கட்டுப்படுத்தாது.
இதன்காரணமாக இது ஜனநாயக ரீதியில் செயற்படாது என்ற கரிசனைகள் காணப்படுகின்றன.

கொழும்பு துறைமுகநகரம் காரணமாகவும்,- அம்பாந்தோட்டை துறைமுகநகரத்திற்கு என்ன நடந்தது என்பதன் காரணமாகவும் (கொழும்பு 99 வருட குத்தகையை மேலும் நீடிக்க தீர்மானித்துள்ளது என்ற ஊகங்களிற்கு மத்தியில்) இலங்கை முழுமையாக சீனாவின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிட்டது என தெரிவித்த ஒரு வட்டாரம் இந்தியாவிற்கு இதனால் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படலாம், இந்திய அரசாங்கங்களிற்கும் சவால்கள் ஏற்படலாம் என தெரிவித்தது.

இந்திய - இலங்கை உறவுகள், கடந்த பெப்ரவரியில் இலங்கை முத்தரப்பு கொழும்பு துறைமுக கிழக்கு கொள்கலன் முனைய அபிவிருத்தி திட்டத்தை கைவிட்டதை தொடர்ந்து வீழ்ச்சியடைய ஆரம்பித்தன. அதற்கு பதில் இலங்கை இந்தியாவிற்கு மேற்கு கொள்கலன் முனையத்தை வழங்கியது - அரசாங்கங்களிற்கு இடையிலான உடன்படிக்கை போலயில்லாமல் தனியார் உடன்பாடு போன்று இது வழங்கப்பட்டது.

இந்திய பிரதமர் நரேந்திரமோடிக்கும் ராஜபக்க்ஷ சகோதாரர்களிற்கும் இடையிலான ஆரம்ப காலநட்புறவு தற்போது மறையத்தொடங்கியுள்ளது என்பது தெளிவான விடயம் என தெரிவித்த தகவல் அறிந்த வட்டாரங்கள் இந்தியாவிற்கு முதலிடம் என்ற இலங்கையின் கொள்கை வேகமாக காணாமல்போகின்றது என தெரிவித்தன. சீனா, இலங்கையை இந்தியாவிலிருந்து விலக்கி கொண்டு சென்றுள்ளதால் இது இடம் பெற்றுள்ளது. இதன் மூலம் இந்து சமுத்திரத்தில் தனது பிரசன்னத்தை பேணலாம் என சீன கருதுகின்றது என அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை அதானி குழுமம் அபிவிருத்தி செய்துவரும் மேற்கு கொள்கலன் முனையத்தை இலங்கையில் கால் பதிப்பதற்கு இந்தியா நம்பியுள்ளது என அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.
ராஜபக்ஷ அரசாங்கம் அரசமைப்பின் 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்த செய்வதன் மூலம் தசாப்தகால இலங்கை தமிழர் விவகாரத்தில் அதிக கவனம் செலுத்த இந்தியா திட்டமிடுகின்றது என அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## 2,259...

கொரோ னாத் தொற்றுடன் அடை யாளம் காணப்பட்ட வர்களின் மொத்த எண்ணிக்கை இரண்டு இலட்சத்து 25 ஆயிரத்து 897 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 90 ஆயிரத்து 464 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 33 ஆயிரத்து 230 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## நிவாரண...

இது தொடர்பில் நீதியரசர் விக்னேஸ்வரன் வெள்யிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்தவை வருமாறு,

கொரோனா பரவலின் தீவிரம் காரணமாக தொடரும் பயணத் தடைகள் மற்றும் முடக்கம் காரணமாக பல்லாயிரக்கணக்கான ஏழை, எளிய மக்கள் உண்ண உணவின்றி பெருந்துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். குறிப்பாக, அரசாங்க வேலைகளோ அல்லது தனியார் நிறுவன வேலைகளோ இல்லாமல் தினமும் கூலி வேலை செய்து வாழ்ந்து வந்த குடும்பங்கள் எந்தவிதமான வருமானமும் இன்றி அனுபவித்துவரும் துன்பங்கள் பற்றிய ஏராளமான செய்திகள் நாளாந்தம் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. இவற்றை நீங்கள் அறிவீர்கள்.

எம்மால் முடிந்தளவுக்கு வெளிநாடுகளில் இருக்கும் ஆதரவாளர்கள், தெரிந்தவர்களின் உதவிகளுடன் சில உதவிகளை நாம் செய்து வருகின்றோம். அதேபோல, ஏனைய கட்சிகளும் தம்மால் முடிந்தளவுக்கு மக்களுக்கு உதவிகளைச் செய்து வருகின்றார்கள். ஆனால், இந்த உதவிகள் எல்லாமே "யானைப்பசிக்கு சோளப்பொரி" போலவே இருக்கின்றன. எம்மால் முடிந்தளவுக்கு எமது சக உறவுகளின் பசியைப் போக்கி இந்த இக்கட்டான சூழ்நிலையில் அவர்களுக்கு உதவி செய்யவேண்டிய பெரும் பொறுப்பு எம் எல்லோருக்கும் இருக்கின்றது.

"நம்பிக்கைப் பொறுப்பு" என்ற எமது பதிவு செய்யப்பட்ட நன்கொடை அமைப்பின் ஊடாக இவ்வாறு அல்லலுறும் மக்களுக்கு எம்மால் முடிந்தளவுக்கு நிவாரண உதவிகளைச் செய்வதற்கு திட்டமிட்டிருக்கின்றோம்.

"நம்பிக்கைப் பொறுப்பு" என்பது முற்றிலும் ஒரு நன்கொடை அமைப்பு. இதன் ஊடாக கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் ஏற்கனவே நாம் நிவாரணம் வழங்கும் பணிகளை முன்னெடுத்து வருகின்றோம். தயவுசெய்து உங்களால் முடிந்தளவு நிதி உதவியினை நாம் முன்னெடுக்கும் கொரோனா நிவாரணப் பணிகளுக்கு வழங்கி உதவுமாறு உங்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன். நீங்கள் வழங்கும் உதவிகள் முழுமையாக கொரோனா நிவாரண பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும் என்று உறுதி வழங்குவதுடன் நீங்கள் அனுப்பும் பணம் மற்றும் செலவழித்த தொகை ஆகியவற்றுக்கான கணக்கு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு அறிக்கை ஊடகங்கள் மூலம் வெளியிடப்படும்.

அத்துடன், நீங்கள் வழங்கும் நிதி உதவிக்கான பற்றுச்சீட்டும் தனித்தனியாக உங்களுக்கு மின்னஞ்சல் ஊடாக அனுப்பி வைக்கப்படும். அண்மையில் நடந்த தேர்தல் வரவு -செலவுகளை வெளிப்படையாக நாங்கள் நடத்தி பத்திரிகைகளில் உரிய விபரங்களை வெளியிட்டிருந்தோம்.

நிதி உதவி செய்ய விரும்புபவர்கள் தயவுசெய்து கீழே கொடுக்கப்பட்டுள்ள வங்கி கணக்குக்கு உங்கள் நிதி உதவிகளை வழங்கலாம். அவ்வாறு நிதி உதவி வழங்குபவர்கள் நீங்கள் உங்கள் பணத்தை அனுப்பிய பின்னர் உங்கள் பெயர் விபரம், அனுப்பிய தொகை, அனுப்பிய திகதி ஆகியவற்றை cvwofficenallur@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு தயவுசெய்து அனுப்பி வைக்கவும். நிதி உதவி செய்பவர்களின் பெயர் விபரங்கள் ஊடகங்களில் வெளியிடப்படாது. மேலதிக தகவல்களுக்கு மேலே தரப்பட்ட மின்னஞ்சலின் ஊடாக தொடர்பு கொள்ளலாம்.

1. Account holder name and full address: Thamizh Makkal Nambikaiporupu. No: 232, Temple Road, Nallur, Jaffna
2. Account number: 0085608699
3. Branch number and full address: Branch No:358, Address: Bank of Ceylon, Nallur Branch, Jaffna, Sri Lanka
4. Institution number: 7010
5. Swift Code / BIC / IBAN code: BCEYLKLX (I)

# ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை: இழக்கும் நிலையில் இலங்கை

கொழும்பு, ஜுன் 15

மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தைப் பாதிக்காத தேசிய பாதுகாப்புக் கட்டமைப்பொன்றே இலங்கைக்கு அவசியம் என்று எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

இலங்கை மீது ஐரோப்பிய பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பயங்கரவாதத் தடைச் சட்டம், பாரிய அளவிலான மனித உரிமை மீறல்களை ஏற்படுத்தும் வகையில் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக ஐரோப்பிய பாராளுமன்றத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

மனித உரிமை விடயத்தில் கடந்த அரசின் கீழ் அடைந்துகொண்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றம், இந்த அரசில் சீர்குலைந்து செல்வதாக ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியுள்ளது.

20 ஆவது திருத்தச் சட்டத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம் எதிர்த்தரப்பு அரசியல்வாதிகளை குறிவைத்து விசாரணை ஆணைக்குழுக்களை நிறுவுவப்படுவதாக எதிர்க்கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

இலங்கை ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகைகளை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது எனவும், சர்வதேச நடைமுறைகளுடன் கூடிய தேசிய சட்ட கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட வேண்டும் எனவும் எதிர்க்கட்சி கேட்டுக் கொண்டுள்ளது. (இ)

## ராஜபக்ஷ...

எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பாக நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ராஜபக்ஷ அரசின் செயல்பாடுகள் நாளுக்கு நாள் மக்களைச் சீற்றத்துக்கே தள்ளிக்கொண்டு போகின்றது.

காலஞ்சென்ற மாதுலுபாவே சோபித தேரர், நாட்டின் அதிகாரங்கள் தனிநபர் ஒருவரின் கரங்களில் குவிக்கப்படக் கூடாது என்று குறிப்பிட்டிருந்தார். அவ்வாறாக அதிகாரங்களைத் தனிமனிதனிடம் வழங்கும்போது என்ன நடக்கும் என்ற நிலைமையை தற்போது புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

இந்நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நிறைவேற்று அதிகாரத்தை எரிபொருள் அதிகரிப்பைத் தடுப்பதற்குப் பயன்படுத்தியிருக்கலாம். அவ்வாறு செய்திருந்தாலே அவர் நிறைவேற்று ஜனாதிபதியாவார்" - என்றார். (இ)

## வடக்கில்...

யசாலையின் ஆய்வுகூடத்தில் 230 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதில் 30 பேருக்கு கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். இதில், யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 6 பேருக்கும் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்கும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இருவருக்குமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 11 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதேபோன்று, கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 11 பேருக்கும், பூநகரி மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்குமாக கிளிநொச்சி மாவட்டத்தில் 14 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர்.

வவுனியா செட்டிக்குளம் ஆதார மருத்துவமனையில் இருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. இதன்படி 27 தொற்றாளர்கள் நேற்று வடக்கில் இனங்காணப்பட்டனர்.

தவிர, யாழ்ப்பாணம் - வசாவிளான் தனிமைப்படுத்தல் முகாமில் இருவருக்கும், கிளிநொச்சி - பரந்தன் தனிமைப்படுத்தல் முகாமில் ஒருவருக்கும் தொற்று உறுப்படுத்தப்பட்டது. (ஐ)

## எக்ஸ் பிரஸ் ...

வெளியேறுவதற்கு விதிக்கப்பட்டிருந்த பயணத் தடை உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளதோடு அவரின் கடவுச்சீட்டைப் பறிமுதல் செய்யவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் தீ விபத்துக்குள்ளான கப்பலின் தலைமை மாலுமி, பிரதம பொறியியலாளர் மற்றும் பிரதி பொறியியலாளர் ஆகியோர் இலங்கையில் இருந்து வெளியேறத் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

கப்பல் விபத்து தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்படி மூவரிடமும் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளனர். (இ)

## பயங்கரவாத...

தூதரக உயர் அதிகாரி, மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துக்குள் வரும் பிரான்ஸ், இத்தாலி, றோமானியா, ஜேர்மனி, நெதர்லாந்து தூதுவர்களை வெளிவிவகார அமைச்சுக்கு நேற்று அழைத்த வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, இவ்விடயத்தில் இலங்கையின் நிலைப்பாட்டை விளக்கினார்.

முஸ்லிம்கள் அல்லது ஏனைய சிறுபான்மையினத்தவர்களை கைது செய்வதற்கோ தடுத்துவைத்திருப்பதற்கோ பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்படவில்லை என மறுத்த அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, ஐரோப்பிய பாராளுமன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தையிட்டு இலங்கையின் கவலையையும் வெளிப்படுத்தினார்.

இந்தச் சந்திப்பில் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, தாரக பாலசூரிய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

## கம்மன்பிலவுக்காக...

அறிக்கையைக் கண்டித்தே 8 கட்சிகளும் பதிலளித்துள்ளன.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் எடுக்கும் தீர்மானங்களை சவாலுக்குட்படுத்தும் குழுவினர் அரசினுள் இருக்கின்றனர் எனவும், அவர்கள் தோற்கடிக்கப்பட வேண்டும் எனவும் குறித்த கட்சிகள் கேட்டுக்கொண்டுள்ளன.

அரசின் பங்காளிக் கட்சிகளான அபே ஜனபல கட்சி, தேசிய சுதந்திர முன்னணி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, லங்கா சமசமாஜக் கட்சி, தேசிய காங்கிரஸ், ஐக்கிய மக்கள் கட்சி, சிறீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சிறீலங்கா மக்கள் கட்சி ஆகிய கட்சிகளே இவ்வாறு கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளன.

எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக பாதிக்கப்பட்ட குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு மானியங்களை வழங்கக்கூடிய யோசனைகளை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்க எதிர்பார்ப்பதாகவும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி, பிரதமர் பங்கேற்புடன் நடைபெற்ற வாழ்க்கைச் செலவு தொடர்பான குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை வலு சக்தி அமைச்சரின் மீது சுமத்த எடுக்கும் முயற்சியை குறித்த கட்சிகள் நிராகரித்துள்ளன.

இவ்வாறான செயற்பாடுகளால் அரசின் மீதான பொதுமக்களின் நம்பிக்கை இல்லாமல் போவதாகவும் அரசின் பங்காளிக் கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன. (இ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# சர்வதேச சமூகத்தை ஏமாற்ற முடியாத இக்கட்டான நிலையிலேயே இலங்கை

## ஐரோப்பிய பாராளுமன்றத் தீர்மானத்தை வரவேற்று கூட்டமைப்பு தலைவர் கருத்து



**கொழும்பு, ஜுன் 15**

**"இலங்கைத் தமிழர்களை ஏமாற்றியதைப் போல் சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றலாம் என்று இலங்கை அரசு நினைத்தால் அது மிகப் பெரும் தவறு. இன்று சர்வதேச சமூகத்தை ஏமாற்ற முடியாத இக்கட்டான நிலையிலேயே இலங்கை அரசு உள்ளது."**

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

ஐரோப்பிய பாராளுமன்றத் தீர்மானம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டும் என இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்து ஐரோப்பிய பாராளுமன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தை வரவேற்கின்றோம்.

தமிழ் மக்கள் நலனில் அக்கறைகொண்ட சர்வதேச சமூகம், இலங்கை மீது பல பரிந்துரைகளை முன்வைத்து பல தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. இதன்போது பல வாக்குறுதிகளையும் இலங்கை அரசிடமிருந்து சர்வதேசம் பெற்றுள்ளது. இதை இந்தியா செய்திருக்கின்றது, ஐரோப்பிய ஒன்றியம் செய்திருக்கின்றது, ஐ.நா. சபை செய்திருக்கின்றது, அமெரிக்கா செய்திருக்கின்றது. இவ்வாறு பல நாடுகளும், நிறுவனங்களும் இலங்கை அரசிடமிருந்து பல்வேறு வாக்குறுதிகளைப் பெற்றுள்ளன.

அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசுக்குப் பல நாடுகளாலும், நிறுவனங்களாலும் போதிய கால அவகாசமும் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கை அரசு, இலங்கைத் தமிழர்களை ஏமாற்றியதைப் போல் சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றலாம் என்று நினைத்தால் அது பெரும் தவறு. இன்று சர்வதேச சமூகத்தை ஏமாற்ற முடியாத இக்கட்டான நிலையிலேயே இலங்கை அரசு உள்ளது.

வாக்குறுதிகளை நிறைவேற்ற இலங்கை அரசு முன்வர வேண்டும். இல்லையேல் சர்வதேச அழுத்தங்கள் இலங்கை அரசு மீது மேலும் அதிகரிக்கும். அதை நாம் வரவேற்கின்றோம். ஏனெனில் அது சர்வதேச சமூகத்தின் கடமை. அந்தக் கடமையை சர்வதேச சமூகம் உரிய வகையில் நிறைவேற்ற வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகளை அழிப்பதற்கு இலங்கை அரசுக்கு போதியளவு உதவிகளை சர்வதேச சமூகம் வழங்கியிருந்தது. அதன்போது தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுப்போம் என்ற வாக்குறுதியை சர்வதேச சமூகத்துக்கு இலங்கை அரசு வழங்கியிருந்தது. ஆனால், அது இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. அந்த வாக்குறுதியை நிறைவேற்ற வைப்பது சர்வதேச சமூகத்தின் கடமை.

வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான கருமங்களை இலங்கை அரசு முன்னெடுக்க வேண்டும். தவறினால் நிலைமைகள் போகப் போக இன்னும் மோசமடையும். பலவிதமான தடைகள் இலங்கை மீது விதிக்கப்படலாம். அதாவது பயணத்தடை, பொருளாதாரத் தடை, மனித உரிமைகள் சம்பந்தமான தடைகள் எனப் பல தடைகள் வரலாம்.

எனவே, தான்தோன்றித்தனமாகச் செயற்படும் இலங்கை அரசு, தனது தற்போதைய நிலைப்பாட்டிலிருந்து மாற வேண்டியது மிகவும் அத்தியாவசியம். மாறாவிட்டால் அரசின் எதிர்காலமும் நாட்டின் எதிர்காலமும் சாத்தியமாக அமையாது" - என்றார். (இ)

# அஸாத் சாலி பற்றிய விசாரணை நிறைவு

**உயர்நீதிமன்றத்துக்கு சட்டமா அதிபர் அறிவிப்பு**



கொழும்பு, ஜுன் 15

முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அஸாத் சாலி தொடர்பான விசாரணைகள் நிறைவடைந்துள்ளன என்று சட்டமா அதிபர் திணைக்களம், உயர்நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

அஸாத் சாலி தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனு மீதான விசாரணைகளின்போதே, சட்டமா அதிபர் திணைக்களம் இவ்வாறு அறிவித்துள்ளது.

சர்ச்சைக்குரிய ஊடக மாநாடு தொடர்பில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அஸாத் சாலி, கடந்த மார்ச் மாதம் 16 ஆம் திகதி முதல் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை அடிப்படை உரிமை மீறலாகும் எனத் தெரிவித்து, உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை அவர் தாக்கல் செய்திருந்தார்.

குறித்த மனுவை விசாரணை செய்யும் நீதியரசர் குழாத்தில் இருந்து நீதியரசர் ஜனாக் டி சில்வா விலகிக்கொண்டதைத் தொடர்ந்து, மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, அஸாத் சாலி மீதான விசாரணைகள் நிறைவடைந்துள்ளன என்று சட்டமா அதிபர் திணைக்களம் உயர்நீதி மன்றத்துக்கு அறிவித்துள்ளது. (இ)

# பஸில் நாட்டில் இருந்திருந்தால் எரிபொருள் விலை உயர்வுக்கு அனுமதித்திருக்கமாட்டார்

## அவருக்கும் சாகரவின் ஊடக அறிக்கைக்கும் தொடர்பு இல்லை என்கின்றார் நிமல் லான்சா



கொழும்பு, ஜுன் 15

சிறீலங்கா பொதுஜன முன்னணியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ நாட்டில் இருந்திருந்தால் எரிபொருள் விலை அதிகரிப்புக்கு இடம்கொடுத்து இருக்க மாட்டார் என்று இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது :-

"எரிபொருள் விலையைக் குறைப்பதற்காக எரிசக்தி அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர் மற்றும் வாழ்க்கைச் செலவு தொடர்பான ஆணைக்குழு மக்கள் நலனைக் கவனத்தில்கொள்ள வேண்டும்.

கொரோனாத் தொற்று காரணமாக மக்கள் ஒன்றரை வருட காலமாக தொழில்வாய்ப்புகளை இழந்து, கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து, நாட்டிலும் எரிபொருள் விலையை அதிகரிக்க அரசு தீர்மானித்தது.

ஆனால், எரிபொருள் விலை அதிகரிப்பு, ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகளைப் பாதிப்பதாக அமைந்துள்ளது. ஏனைய பொருட்களின் விலைகளும் அதிகரிக்கக்கூடும்.

விலை அதிகரிப்பானது, சட்டியில் இருந்த மக்களை அடுப்புக்குள் விழச் செய்துள்ளது.

சிறீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசத்தின் ஊடக அறிக்கையின் பின்னணியில் பஸில் ராஜபக்ஷ இயங்கவில்லை. பஸில் ராஜபக்ஷவுக்கு அவசியமானதை, அவர் நேரடியாகக் கூறுவார்" - என்றார். (இ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.06.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்




7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை




**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-சுறா,வேங்கை திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா-சினிமா தகவல்கள்
6.30 மணி : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**
7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு